TET-ஆசிரியர் தகுதித் தேர்வு தாள்-1-ல் தேர்ச்சி பெற்ற ஆசிரியருக்கு மட்டுமே நியமானத் தேர்வுக்காக தொகுக்கப்பட்ட

# தமிழ்

SECONDARY GRADE TEACHERS

(SGT)

(இடைநிலை ஆசிரியருக்கு)

COMPETITIVE EXAM

(போட்டித் தேர்வு)

# SGT EXAM TAMIL

# Study material

Trb Free Test & Free materials group

https://t.me/trbenglishtest

Willing teacher join our above the link

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# TET-PAPER-I-தமிழ்

From 2017 Upto 2023

1-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை

# போட்டித் தேர்வு

# (Competitive Exam)

# STUDY MATERIALS

| நூலாசிரியர் | நூல்கள் |
|---|---|
| அழ. வள்ளியப்பா | காவல்காரர்/இறகு/கண்ணாடி |
| ஔவையார் | நல்வழி/மூதுரை |
| ஈரோடு தமிழன்பன் | என்ன வண்ணம் வேண்டும்? |
| குமரகுருபரர் | நீதிநெறி விளக்கம் |
| நா. காமராசன் | அன்னைத் தமிழே! |
| அதிவீரராமப் பாண்டியர் | சான்றோர் மொழி |
| பாரதிதாசன் | தமிழின் இனிமை |
| நாமக்கல் வெ. இராமலிங்கனார் | உழவுப் பொங்கல் |
| காரியாசான் | சிறுபஞ்சமூலம் |
| அறநெறிச்சாரம் | முனைப்பாடியார் |
| சிவப்பிரகாச சுவாமிகள் | நன்னெறி |
| வையம்பட்டி முத்துசாமி | யாரு? யாரு? யாரு ? |

❖ நெகிழிப் பொருள்களை உண்டதால் பசு இறந்தது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- நெகிழி மக்காத குப்பையாக மாறி சாக்கடையில் ஈ, கொசு, உற்பத்தியாக உதவுகிறது. இது ஓசோன் படலத்தைப் பாதிப்பதால் சூரியனின் புற ஊதாக் கதிர்கள் நம்மைத் தாக்குகின்றன.
- நெகிழியற்ற உலகை உருவாக்குவோம்
- நெகிழியை ஒழிப்போம் மண்வளம் காப்போம்.
- எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
- நூல் நிலையம், புத்தகச் சாலை ஆகியவை நூலகத்தின் வேறு பெயர்கள் ஆகும்.
- நூலகத்தில் நமக்குத் தேவையான அல்லது பிடித்த நூல்களை எடுத்துப் படிக்கலாம். நூலகத்தில் உறுப்பினராகச் சேர்ந்தால் நூல்களை வீட்டிற்கே கொண்டு சென்றும் படிக்கலாம்.
- நூலகத்தில் உள்ள “வாசகர் வட்டம்” மூலமாக “நூலக தினத்தன்று” குழந்தைகளுக்கான போட்டிகள் அனைத்து நூலகங்களிலும் நடத்தப்படுகின்றன.
- நேற்று நான் நூலகத்திற்குச் சென்றேன். அங்கு சிந்துபாத்தின் கடற் பயணங்கள்’ என்ற படக் கதையை வாசித்தேன். கதை மிகச் சிறப்பாகவும் விறுவிறுப்பாகவும் இருந்தது. சிந்துபாத் சென்ற தீவுகள், அவரது அனுபவங்கள், அவரது சாகசச் செயல்கள் போன்றவை கடற்பயணத்தின் மீது என் ஆவலைத் தூண்டின. அதைப் படித்ததில் எனக்கு அதிக மகிழ்ச்சி ஏற்பட்டது.
- அடிமலர்ந்து, நுனி மலராத பூ என்ன பூ? வாழைப் பூ
- கையிலே அடங்கும் பிள்ளை, கதை நூறு சொல்லும் பிள்ளை அது என்ன?

 புத்தகம்

- அன்றாடம் மலரும் அனைவரையும் கவரும் அது என்ன? கோலம்
- இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது, அது என்ன? மாட்டுக்கு,
- அடி காட்டுக்கு, நடு மாட்டுக்கு, நுனி வீட்டுக்கு அது என்ன? நெல்
- ஒளி கொடுக்கும் விளக்கல்ல, வெப்பம் தரும் நெருப்பல்ல, பளபளக்கும் தங்கம் அல்ல அது என்ன? சூரியன்

**குழுவில் சேராததை வட்டமிடுக.**

(i) மயில், கிளி, புறா, புலி, கோழி
 விடை: புலி

(ii) ஆறு, ஏரி, குளம், மலை, குட்டை
 விடை: மலை

(iii) தாயம், பல்லாங்குழி, ஐந்தாங்கல், சதுரங்கம், மட்டைப்பந்து
 விடை: மட்டைப்பந்து

(iv) வெண்மை, கருமை, மென்மை, பசுமை, செம்மை



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

விடை: மென்மை

(v) கத்தரி, வெண்டை, பாசம், தக்காளி, தென்னை, மிளகாய்

விடை: பாசம்

- காடுகளை அழித்தால் பற்பல உயிரினங்கள் அழிந்துவிடும். காட்டு விலங்குகள் நீரையும், உணவையும் தேடி ஊருக்குள் புகுந்து சேதம் விளைவிக்கும். இதனைத் தடுக்க மரக் கன்றுகளை ஊன்றிப் பாதுகாக்க வேண்டும். பூமியைப் பசுமை நிறைந்ததாக மாற்ற வேண்டும்.
- இன்று கிராமசபைக் கூட்டம் நடைபெறுகிறது. வீட்டிற்கு ஒருவர் கூட்டத்தில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்று 'தண்டோரா' மூலம் செய்தி அறிவிக்கப்பட்டது.
- அரசின் சிறுதொழில் தொடங்குவதற்கான உதவித் தொகை வழங்கும் திட்டம் குறித்து பஞ்சாயத்துத் தலைவர் கிராமசபைக் கூட்டத்தில் பேசினார்.
- பண உதவி தேவைப்படுவோருக்கான கூட்டத்தில் பொன்வண்ணன் கலந்து கொள்ள வில்லை. எனவே அவருக்கு உதவித்தொகை கிடைக்கவில்லை.
- மக்கள் கிராமசபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.
- கல்வி கண் போன்றது.
- ஓணானின் வாலில் முள் குத்தி மாட்டிக் கொண்டது. அதை எடுப்பதற்காக ஓணான் உழவரிடம் சென்றது.
- தோட்டக்காரன் ஓணானிடம் பானை உடைந்து விட்டது. எனவே அதற்குப் பதில் பூக்களைத் தருவதாகக் கூறினான்.
- கத்தி, விறகு, தோசை, பானை, பூக்கள், மேளம் - ஆகியவை ஓணான் பெற்று வந்த பொருள்கள் ஆகும்.
- துன்பம் வரும் வேளையில் மனம் சோர்வு அடையக் கூடாது. eஒன்று போனால் மற்றொன்று கிடைக்கும் என் தன்னம்பிக்கை நமக்கு வேண்டும்.
- ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி, மான் பூங்கா, முதலைப் பண்ணை .
- ஒகேனக்கல் அருவியில் நீர் விழும் காட்சி, வெள்ளியை உருக்கி ஊற்றியது போல் காணப்படும்.
- சங்கவை பார்த்த மிகப்பழைமையான கோவிலின் பெயர் என்ன ?
  தேசநாதீஸ்வரர் கோயில்.
- ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி தருமபுரி மாவட்டத்தில் உள்ள பென்னாகரம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 16 கி.மீ. தூரத்தில் உள்ளது.
- அருவியிலிருந்து விழும் நீர், பாறையில் பட்டு, வெண்புகை போலத் தோன்றும்.
- கடல் மட்டத்திலிருந்து ஒகேனக்கல் 1500 அடி உயரத்தில் உள்ளது.
- வலப்பக்க சுவரின் மேல் பல்லி இருக்கிறது.
- பசியால் மெலிந்த ஓநாய் காடு முழுவதும் சுற்றித் திரிந்தது.
- நாய், ஓநாயைக் காட்டைவிட்டு வெளியேறி வீட்டிற்கு வரும்படி சொன்னது.
- நாயின் கழுத்தில், அதைச் சங்கிலியால் கட்டிப்போட ஒரு கருப்புப் பட்டை இருந்தது.

- ஓநாய் தின்பதற்கு எதுவும் கிடைக்காமல் மெலிந்திருந்தது.
- ஓநாயை நாய் வீட்டிற்கு அழைத்தது.
- முயல், மான் ஒன்றுடன் நண்பனர்கப் பழகியது.
- மானை விட்டுவிட நரி மூன்று புதிர்களைக் கூறி, அவற்றிற்கான விடையைக் கேட்டது.
- நரியின் சூழ்ச்சியைப் புரிந்து கொள்ளத்தால் மான் மாட்டிக் கொண்டது.
- நரி சூழ்ச்சி மிக்கது. எனவே மற்ற விலங்குகள் நரியிடம் நட்பு கொள்வதைத் தவிர்த்தன.
- ஒட்டகச்சிவிங்கி மரக்கிளையைப் பிடித்து உலுக்கியது எனவே தூக்கணாங்குருவிக் குஞ்சுகள் பயந்து போய்க் கத்தின.
- தேனீக்களும் தவளைகளும் தூக்கணாங்குருவிக்கு உதவி செய்தவர்கள் ஆவர்.
- தேனீ, ஒட்டகச்சிவிங்கியின் காதருகே சென்று கடித்தது.
- தூக்கணாங்குருவிக் குஞ்சுகள் கீச்··· கீச்···என ஒலியெழுப்பி மகிழ்ச்சியாக இருந்தன.
- மரத்தியின் அடியில் ஒட்டகச்சிவிங்கி ஒதுங்கியது.
- தூக்கணாங்குருவிக்கு முதலில் தேனீ வந்தது.
- ஆடும் பறவை வரும் அழகாய் இருக்கும். -மயில்
- அறுக்க உதவும் கருவியைப் பெறுவாய் அரம்.
- உன் அடையாளங்களில் ஒன்றைப் பெறுவாய் மச்சம்.
- குளித்து மகிழ்ந்து குளிர்ச்சி அடைவாய் அருவி.
- மூக்கின் வழியே நுகர்ந்து மகிழ்வாய் மணம்.
- ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந் நாளும் அவ்வாறு
- ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் - ஏற்றவர்க்கு
- நல்வழி என்னும் நூலை எழுதியவர் ஔவையார்.
- நல்ல குடிப்பிறந்தார் நல் கூர்ந்தார் ஆனாலும்

  இல்லைஎன மாட்டார் இசைந்து- ஔவையார்

- அமிழ்தினும் இனிய மொழி' நம் தமிழ் மொழியாகும். தமிழ் மொழிபோல் இனிய மொழி வேறில்லை என பாரதியாரும், 'தமிழ் எங்கள் உயிர்' என்று பாரதிதாசனும் பாடி மகிழ்ந்தனர்.
- தமிழ் மொழியானது, இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் சேர்ந்து முத்தமிழ் என அழைக்கப்படுகிறது. கீழடியில் நிகழ்பெற்ற அகழாய்வுகள் தமிழ் மொழி ஆதித் தமிழர் மொழி' என்பதை உறுதிப் படுத்துகின்றன.
- கணியன் பூங்குன்றனின் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றுப் பாடல் வரி ஐக்கிய நாடுகள் அவையில் இடம் பெற்றுள்ளது. தமிழ் மொழிக்கு செம்மொழி' என்ற தகுதியை நடுவண் அரசு அறிவித்து சிறப்புச் செய்துள்ளது.

- வீரம், கொடை, பண்பாடு, விருந்தோம்பல் போன்ற உயர் பண்புகள் தமிழனத்தின் அடையாளங்களாகத் திகழுகின்றன. தொல்காப்பியம்' என்னும் தமிழ் இலக்கண நூலும் 'உலகப் பொதுமறை' என அழைக்கப்படும் திருக்குறள் நூலும் இலக்கிய உலகில் ஈடு இணையற்ற பழம்பெரும் படைப்புகளாக 4 விளங்குகின்றன.
- ஜி.யு. போப் என்பவர் திருக்குறளின் அருமை பெருமைகளை அறிந்து, அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலகறியச் செய்தார். தமிழ்மேல் தனக்கிருந்த ஆர்வத்தால் தன்னைத் தமிழ் மாணவன்' என்றும் அறிவித்துக் கொண்டார்.
- ஈராயிரம் ஆண்டுகளாக எழுத்திலும் பேச்சிலும் எழுச்சி காட்டி வரும் எழில் கொஞ்சும் இனிய மொழி தமிழ் மொழியாகும். தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்ற கூற்று தம்மை இத்தரணியில் தலை நிமிர்ந்து நடந்திடச் செய்யும் என்பதில் ஐயம் இல்லை.
- தமிழ்மொழி தனித்து இயங்கும் ஆற்றல் பெற்ற செம்மொழியாகும்.
- தமிழ்மொழி உலக இலக்கியங்களில் தலை சிறந்து விளங்கும் தொல்காப்பியம்' , 'திருக்குறள்' ஆகிய இலக்கியப் படைப்புகளைக் கொண்டதாகும்.
- கீழடி அகழாய்வில் பண்டைக் காலத்தில் தமிழர்கள் பயன்படுத்திய மண்பாண்டங்கள், அணிகலன்கள், ஆடைகள், வீடுகட்டப் பயன்படுத்திய பொருள்கள் ஆகியவை கண்டு 'பிடிக்கப்பட்டுள்ளன.
- யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றுப் பாடல் வரி மூலம் கணியன் பூங்குன்றனார் தமிழரின் பெருமையை வெளிப்படுத்துகிறார்.
- தமிழ்மொழி தொன்மையானது. உலகத்தரம் வாய்ந்த இலக்கண இலக்கியங்களைக் கொண்டது. இது தனித்து இயங்கும் ஆற்றல் பெற்றுள்ளதால் செம்மொழி' என அழைக்கப்படுகிறது.
- தமிழ்மொழி தொன்மை வாய்ந்த உலக மொழிகளில் ஒன்று. இம்மொழி உயர்ந்த இலக்கண, இலக்கிய நூல்களைக் கொண்டது, இயல், இசை, நாடகம் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளதால் இது முத்தமிழ் என அழைக்கப்படுகிறது. இனிமையும் வளமையும் கொண்டுள்ள தமிழ்மொழி செம்மொழி என்ற பெருமை பெற்றுள்ளது.
- பாறை ஓவியங்களில் தமிழர்களின் வீரம் சார்ந்த விளையாட்டுகள் பற்றிய செய்திகள் உள்ளன.
- பிறமொழி உதவி இல்லாமல் தனித்து இயங்குவதால் தமிழ்மொழி செம்மொழி ஆகும்.
- நடுவண் அரசு 2004 ஆம் ஆண்டு தமிழைச் செம்மொழி என அறிவித்தது.
- தமிழன்னை தன்னை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல் தன்னுடன் சேர்ந்து வளர்வதாக நா. காமராசர் கூறுகிறார்.

இன்பத்தமிழ்

தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்

தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!

தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத்

தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!

தமிழுக்கு மணமென்று பேர் - இன்பத்

தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்! - பாரதிதாசன்

- கிளி வளர்த்தேன், பறந்து போனது அணில் வளர்த்தேன், ஓடிப்போனது, மரம் வளர்த்தேன்… இரண்டும் திரும்பி வந்தது- டாக்டர் அப்துல்கலாம்
- நுங்கு, பனங்கிழங்கு, பனம்பழம், பதநீர், கற்கண்டு, கருப்பட்டி போன்ற உணவுப் பொருட்கள் பனை மரத்திலிருந்து கிடைக்கின்றன.
- பனங்காய் வண்டி, பனை ஓலைக் காற்றாடி, பனை ஓலை விசிறி, பொம்மைகள் ஆகியவற்றை செய்து சிறுவர்கள் விளையாடுவதற்குப் பனைமரம் உதவுகிறது.
- “மரங்கள் இன்றி மனிதர்கள் இல்லை” இதனை உணர்ந்து நாம் அனைவரும் பனைமரம் வெட்டப்படுவதைத் தடுக்க வேண்டும். பனை மரத்தினைப் பற்றிய பல அரிய செய்திகளை அறிந்து கொண்டு, பனையின் சிறப்பினை நமது நண்பர்களுக்கும், மற்றவர்களுக்கும் எடுத்துக்கூற வேண்டும். பனங்கொட்டைகளைச் சேகரித்து குளம், ஆறு, குட்டை போன்றவற்றின் கரையோரங்களில் விதைகளை ஊன்றி பாதுகாக்கலாம்.

(i) பனைமரம் நீண்டு வளரக்கூடியது. இது வேர், தூர்ப் பகுதி, நடுமரம், பத்தை மட்டை, உச்சிப் பகுதி, ஓலை, சில்லாட்டை, பாளைபீலி, பனங்காய், பச்சை மட்டை, சாரை ஓலை, குருத்தோலை என்ற பன்னிரண்டு உறுப்புகளை உடைய மரம். இப்பொருட்கள் அனைத்தும் மனிதர்களுக்குப் பயன்படுவன.

(ii) (ii) நுங்கும், பனங்கிழங்கும், பனம்பழமும் உணவாகப் பயன்படுகின்றன. ஓலை கூடைகள் முடையவும், கைவினைப்பொருட்கள் செய்யவும், கூரை வேயவும் பயன்படுகிறது.

(iii) பனஞ்சாறு பதனீராகவும், கற்கண்டாகவும், கருப்பட்டியாகவும் பயன் தருகிறது. பனை மரம் புயலைத் தாங்கும் வல்லமை பெற்றது. பனை ஓலை ஓலைச்சுவடிக்காகவும் பயன்படுத்தப்பட்டது.

(iv) பனை மரத்தின் வேர் நீரைத் தக்க வைத்துக்கொள்ளும் இயல்பு கொண்டது. இது நிலத்தடி நீர் மட்டம் உயர் காரணமாக அமைகிறது.

(v) பனங்காய் வண்டி, பனைஓலை காற்றாடி, பனை ஓலை விசிறி, பொம்மைகள் ஆகியவற்றைச் செய்து விளையாட்டுக்கள் விளையாட பயன்படுகிறது. பறவைகளுக்கு வாழிடமாகவும் விளங்குகிறது.

- பனை மரத்தின் வேறு பெயர் கற்பகத்தரு.
- வேர், தூர்ப்பகுதி, நடுமரம், பந்தைமட்டை, உச்சிப் பகுதி, ஓலை, சில்லாட்டை, பாளைப்பீலி, பனங்காய், பச்சைமட்டை, சாறை ஓலை, குருத்தோலை.
- நமது முன்னோர்கள் பற்றியும் பண்டைய இலக்கியங்கள் பற்றியும் தெரிந்து கொள்ள நமக்குப் பெரிதும் உதவிய ஓலைச்சுவடிகளாகப் பனை ஓலை பயன்படுத்தப்பட்டுள்ளது.
- பனை மரத்தின் வேர் நீரைத் தக்க வைத்துக் கொள்வதால் நிலத்தடி நீர் மட்டம் உயர்கிறது.
- பனை மரங்கள் வெட்டப்படுவதால் அந்த மரத்தைச் சார்ந்து இருக்கும் பனங்காடை, பனை உழவரான் போன்ற பறவைகள் தம் வாழிடங்களை இழக்கின்றன.
- விஜயநகர அரசின் அவைப்புலவர் தெனாலிராமன் ஆவார்.
- விஜயவர்த்தன அரசர் தெனாலிராமனிடம், தனக்குக் காலையில் தங்க மஞ்சள் நிறத்திலும், நடுப்பகலில் சிவப்பு நிறத்திலும், இரவில் ஏழு வர்ணங்களிலும் உருமாறும் அற்புதக்குருவி ஒன்றை கொண்டு வந்து தர வேண்டும். மேலும், அது சில சமயம் மூன்று கால்களாலும், சில சமயம் இரட்டை கால்காளாலும் நடக்க வேண்டும். பிறகு ஏழு இறக்கைகளைக் கொண்டு வானில் பறக்க வேண்டும் என்று கேட்டார்.
- "அரசரிடம் போய் சொல், காலைப் பொழுதாகவும் இருக்கக்கூடாது, நடுப்பகல் பொழுதாகவும் இருக்கக்கூடாது, மாலைப்பொழுதாகவும் இருக்கக்கூடாது, வெளிச்சமாகவும் இருக்கக்கூடாது, இருளாகவும் இருக்கக்கூடாது அந்த நேரத்தில் நானே எனது ஏழு இறக்கைகளால் பறந்து திரும்ப வந்து விடுவேன்" என்று குருவி கூறியதாக தெனாலிராமன் அரசவையில் சொன்னார்.
- அண்டை நாட்டு மன்னர் விஜயவர்த்தனர் கிருஷ்ணதேவராயரிடம் தெனாலிராமனின் அறிவுக்கூர்மையைச் சோதிக்க அனுமதி பெற்றார்.
- தெனாலிராமனின் நிலை மோசமாக இருந்தது. உடை கிழிந்து இருந்ததுடன், அதில் முட்களும், மண்ணும் ஒட்டியிருந்தன. அவரது கையில் காலியான பறவைக் கூண்டு ஒன்று இருந்தது.
- விகடகவி என்றால் நகைச்சுவை தோன்ற பாடுபவர் என்பது பொருள்.
- கடுகுலயுஞ் பயறு, காராமணிப் பயறு, மிளகுளவும் சிறுபயறு, மணிப்பயறு
- முளைப்பாரிப் பாடலில் கூறப்பட்டுள்ள எரு மாட்டெரு, ஆட்டெரு.
- ஆநெய் என்பது பசுவின் நெய்யினையும், பூநெய் என்பது பூவில் ஊறும் தேனையும் குறிக்கின்றன.

- "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்குடி" என்பதே தமிழ்க்குடியின் சிறப்பினைக் கூறும் பழமொழி ஆகும். "மண் என்றால் ஆட்சி" கல்வி அறிவும், மன்னர் ஆட்சியும் தோன்றாத காலத்திலேயே தமிழ்மொழி பேச்சு மொழியாக இருந்துள்ளது. இதுவே, இப்பழமொழியின் பொருளாகும்.
- ஆலமரத்தின் விதை தெரிந்த நீர் கொண்ட குளத்தின் சிறிய மீனின் முட்டையை விடவும் சிறியதாக இருக்கும் என்று அதிவீரராம பாண்டியர் குறிப்பிடுகிறார்.
- ஆலமரத்தின் நிழலில் யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை போன்ற படைகள் தங்கும்.
- இப்பாடலின் பொருள் பிறருக்குச் செய்யும் உதவியுடன் ஒப்பிட்டுக் கூறப்படுகிறது.
- வெற்றி வேற்கை நூலின் ஆசிரியர் அதிவீரராமபாண்டியர் இந்நூலின் வேறு பெயர் நறுந்தொகை.
- அழகிய மலைக்கிராமத்தின் பெயர் மன்னவனூர் ஆகும்.
- மழை பெய்து ஓய்ந்திருந்தது, சாலையெங்கும் தண்ணீர் நிறைந்திருந்தது. மரங்கள் நனைந்து கிளைகள் இலைகள் முழுக்க நீர்த்திவலைகள் தெரிந்தன. பச்சைப்பசேல் என்ற வயல்வெளிகள்.
- பிள்ளைகள் காலை உணவாக, வரகரிசிச் சோறும் பருப்புக் கடையலும் பிரண்டைத் துவையலும் சாப்பிட்டனர்.
- உரைப்பகுதியை படித்து வினாக்களுக்கு விடையளிக்க

  சிறு தானிய உணவுகளே நம் உடல் நலத்திற்கு ஏற்றவை. குதிரை வாலி அரிசி, தினை, வரகரிசி, கேழ்வரகு, கம்பு, சோளம், பனிவரகு அரிசி, மாப்பிள்ளை சம்பா அரிசி, போன்றவை சிறு தானியங்கள் ஆகும். இந்தச் சிறு தானியங்களைக் கொண்டு பல உணவு வகைகளை மண் பானைகளில் சமைத்துப் பயன்படுத்துவது மிகவும் நல்லது. நாம் உண்ட உணவு முழுமையாகச் செரித்தபிறகுதான் அடுத்த வேளை உணவை உண்ண வேண்டும். இதைத் தான் நம் முன்னோர் "பசித்துப் புசி" என்றனர். இவற்றைத் தவிர்த்துவிட்டுத் துரித உணவுகளைச் சாப்பிடத் தொடங்கியதே பல்வேறு நோய்கள் ஏற்படக் காரணமாகிறது. சிறு தானிய உணவுகளை உண்போம்! வளமான வாழ்வைப் பெறுவோம்!
- எவ்வகை உணவு முறை நமக்கு ஏற்புடையது?

  சிறுதானிய உணவுகளே நமக்கு ஏற்புடையது.
- சிறு தானியங்களுள் எவையேனும் நான்கு எழுதுக.

  தினை, வரகரசி, கேழ்வரகு, கம்பு.
- துரித உணவு வகைகளை உண்ணக் கூடாது, ஏன்?

  துரித உணவு வகைகள் பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைவதால் அவைகளை உண்ணக் கூடாது.
- அம்மாவின் பொட்டு எதைப் போல் இருந்தது?



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

அம்மாவின் நெற்றியில் சிவப்பாக குங்குமப் பொட்டு வட்ட நிலா போல இருந்தது.

- பிள்ளைகள், பசுஞ்சாணம் மெழுகிய தரையில் மனைப் பலகையில் அமர்ந்து உணவு உண்ட னர்.
- அறிவுமதி விறகு அடுப்பில் கருத்த மண்சட்டியில் சமைத்தாள்.
- கல்லணை அமைந்துள்ள மாவட்டம் தஞ்சாவூர்.
- தமிழ்நாட்டில் காவிரியின் முக்கிய துணையாறு கொள்ளிடம்.
- கல்லணையைக் கட்டிய அரசன் கரிகாலன்.
- கல்லணை ..................... தொழில்நுட்பத்திற்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது. (பழந்தமிழர்)
- கரிகாலனின் இயற்பெயர் வளவன்.
- கரிகாலன் என்பதற்குக் கருகிய காலை உடையவன் என்பது பொருள். இளம் வயதில் இவருக்கு ஏற்பட்ட தீவிபத்தின் காரணமாக இப்பெயர் இவருக்கு வழங்கலாயிற்று.
- காவிரியில் அடிக்கடி பெருவெள்ளம் வரும். ஆனால் அந்த நீர் எதற்கும் பயன்படாமல் கடலுக்குச் சென்றுவிடும். மக்கள் மழைக்காலத்தில் வெள்ளப்பெருக்காலும், கோடைக்காலத்தில் நீர் இன்றியும் மக்கள் துயரப்பட்டதைக் கண்டு அதனைத் தடுக்கும் பொருட்டு பெரியதோர் அணையைக் கட்டினான்.
- தற்போது பயன்பாட்டில் உள்ள மிகப்பழமையான ஒரே அணை கல்லணை. இதுவே உலகின் மிகப்பழமையான நீர்ப்பாசனத்திட்டம் எனவும் கூறப்படுகிறது. மணலில் அடித்தளம் அமைத்துக் கட்டியுள்ளார்கள். இது பழந்தமிழரின் தொழில் நுட்பத்திற்குச் சான்றாகும். இன்று வரை இது வியத்தகு சாதனையாக உள்ளது.
- கல்லணை தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. இது திருச்சியிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ளது.
- காவிரி ஆற்றின் மீது பெரிய பாறைகளைக் கொண்டு வந்து போட்டனர். அந்தப் பாறைகளும் நீர் அரிப்பின் காரணமாகக் கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் சென்றன.
- அந்தப் பாறையின் மேல் வேறொரு பாறையை வைத்து நடுவே தண்ணீரில் கறையாத ஒரு வித ஒட்டும் களிமண்ணைப் பூசி, இரண்டும் ஒன்றோடும் ஒன்று ஒட்டிக் கொள்ளும்படி செய்தனர்.
- கல்லணை இரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.
- காவிரி ஆறு எந்தெந்த ஆறுகளாகப் பிரிகிறது
  - (i) காவிரி
  - (ii) கொள்ளிடம்
  - (iii) வெண்ணாறு
  - (iv) புது ஆறு.
- கல்லணை பயன்பெறும் மாவட்டங்கள் திருச்சி, தஞ்சாவூர்.

- தோட்டத்தின் நடுவே ராஜா போல் நின்றவர் சோளக்கொல்லைப் பொம்மையாகிய காவல்காரர்.
- காவல்காரருக்குத் தோட்டத்தில் உள்ள பணி, இரவும் பகலும் வயலில் நின்று காவல் காப்பதாகும்.
- பொம்மைக்குக் கறுப்புக்கோட்டு, வெள்ளைச்சட்டை கொடுத்தது காகம்.
- காவல்காரர் உயிரற்ற பொருள் என்பதால் காகம் கொடுத்த ஆடைகளைக் காவல்காரர் அணியவில்லை.
- நமக்குப் பயன்தரும் பல மரங்களுள் வாழையும் ஒன்று. வாழையின் பூ, காய், கனி, தண்டு ஆகியவற்றை நாம் சமைத்து உண்கிறோம். வாழைநாரைக் கொண்டு பூக்களைத் தொடுக்கிறோம். திருமண விழாக்களிலும் வீட்டில் நடைபெறும் விழாக்களிலும் வாழையிலையில் விருந்து படைக்கின்றனர். வாழையில் செவ்வாழை, பூவன் வாழை, மலை வாழை எனப் பலவகைகள் உள்ளன.

வினாக்கள் :

- வாழையின் எப்பகுதிகள் உணவாகப் பயன்படுகின்றன?
  பூ, காய், கனி, தண்டு
- வாழைநார் எதற்குப் பயன்படுகிறது?
  வாழைநார் பூத்தொடுக்கப் பயன்படுகிறது.
- வாழையின் வகைகளுள் இரண்டை எழுதுக.
  செவ்வாழை, பூவன் வாழை
- வாழையிலை - இச்சொல்லைப் பிரித்து எழுதுக.
  வாழை + இலை
- பலவகை - இச்சொல்லுக்கு எதிர்ச்சொல் எழுதுக.
  சிலவகை.
- பொம்மை அணிந்திருந்த ஆடைகள் கனத்த மழையால் கிழிந்திருந்தன. அதனால் காகம் பொம்மைக்குப் புதிய ஆடைகளைக் கொடுத்தது.
- தோட்டத்தில் இருந்த பொம்மை ‘உயிருள்ள மனிதர்’ என்று எண்ணி பறவைகள் அங்கு வராமலிருந்தன. அது உயிரற்ற பொருள் என்பதை உணர்ந்ததால் காகம், மற்ற பறவைகளையும் கூவி அழைத்தது.
- அழ.வள்ளியப்பா அவர்கள் குழந்தைகளுக்கான கதைகளையும் பாடல்களையும் மிகுதியாகப் பாடியுள்ளமையால், குழந்தைக்கவிஞர் என அழைக்கப்படுகிறார்.
- ‘மலரும் உள்ளம்’ நூலை எழுதியவர் குழந்தைக்கவிஞர் அழ. வள்ளியப்பா ஆவார்.
- நோய் எதிர்ப்புச்சக்தி குறைந்து நோய்கள் வருகின்றன.
- உணவுகள் உயிர்ச்சத்தின்றி இருக்கின்றன.

- நெல், கம்பு, கேழ்வரகு, உளுந்து, துவரம்பருப்பு, எண்ணெய் வித்துகள், காய்கள், பழங்கள் எனப் பலவகையான உணவுப் பொருள்களை நிலம் கொடுப்பதால், நிலத்தைத் தெய்வமாக வணங்க வேண்டும்.
- இளமாறன் தன் தாத்தா கூறியவற்றைச் சிந்தித்துக் கொண்டிருந்தான். அப்போது அவனுடைய அப்பா "வயலுக்குச் சென்று வந்தாயா? உன் தாத்தாவை வயலுக்குப் போக வேண்டாம் என்று சொன்னால் அவர் எங்கே கேட்கிறார்?" என்று கூறினார்.
- அதற்கு இளமாறன் "யாருமே வயலுக்குப் போகவில்லை என்றால் என்னவாகும்?" என்று கேட்டான். "எல்லாரும் இப்படியே இருந்து விட்டால் விவசாயத்தை யார் செய்வது?" என்று கேட்டுத் தன் தந்தையின் தவற்றைச் சுட்டிக் காட்டினான்.
- மாமரத்திலிருந்த கிளிகள் கீச் கீச் எனக் குரலெழுப்பி அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தன.
- வைக்கோல்போரின் மீது சேவலொன்று மெதுவாக நடைபயின்று கொண்டிருந்தது.
- தோட்டத்தில் துள்ளிக்குதித்துக் கொண்டிருந்த கன்றைக் கண்டு பசு, "ம்மா… " எனக் குரலெழுப்பியது.
- இளமாறன் தன் தாத்தாவிற்கு சாப்பாடு கொடுப்பதற்காக வயலுக்குச் சென்றான்.
- நெல்மணிகள் கற்றறிந்த சான்றோர் போலக் குனிந்து நின்றன.
- வளையிலிருந்து நண்டுகள் எட்டிப் பார்த்து, தம் கொடுக்குகளை மேலும் கீழுமாக அசைத்து நகர்ந்தன. அதைப் பார்த்து இளமாறன் வியப்படைந்தான். வயலில் வேலை செய்ததால்தான் தன் உடல் வலிமையாக உள்ளது என்றும், வலிமையாக இருப்பதால் நோய்நொடியின்றி இருப்பதாகவும் கூறினார்.
- வயல்தான் தமக்குச் சொத்து. இங்கு விளைகின்ற பயிர்கள் மக்களை வாழவைக்கின்றன. உண்ணுகின்ற உணவுப் பொருள்களெல்லாம் தம்மைப் போன்ற உழவர்களின் உழைப்பின் மூலமாகவே கிடைப்பதாக தாத்தா கூறினார்.
- உழவர்கள் விளைவிப்பவை நெல், கம்பு, கேழ்வரகு, உளுந்து, துவரம்பருப்பு, எண்ணெய்வித்துகள், காய்கள், பழங்கள்.
- உழவர்களின் தேவைக்குப் போக விளைந்ததைப் பிறருக்குக் கொடுக்கும் போது கிடைக்கிற மகிழ்ச்சிக்கு ஈடு இணை இல்லை என தாத்தா குறிப்பிட்டார்.
- தாத்தா இயற்கை உரம், செயற்கை உரம் பற்றிக் கூறியனவற்றை எழுதுக.இயற்கை உரம்:
- ஆடு மாடுகளின் சாணத்தை ஒன்று சேர்த்து எருவாக்கி, நிலத்தில் போடுதல்.
- தாவரங்களின் தழைகளை மண்ணிலிட்டு மட்கச் செய்தல்.

- இந்த இயற்கை உரங்களைப் பயன்படுத்தினால் நல்ல விளைச்சல் கிடைக்கும். நாம் நல்ல உடல் நலத்தோடும் நோய் எதிர்ப்புச் சக்தியோடும் வாழலாம்.
- செயற்கை உரங்களைத் தெளிப்பதனால் தேனீ, வண்ணத்துப்பூச்சி, மண்புழு போன்றவை அழிந்து விடுகிறது. அதனால் மண் மாசடைகிறது.
- செயற்கை உரம், பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றை மண்ணில் தெளிப்பதனால் தண்ணீர் மாசடைகிறது. தொழிற்சாலைக் கழிவுகளை அப்படியே நிலத்தில் விடுவதால் நிலத்தடிநீர் மாசடைகிறது.
- இவற்றைப் பயன்படுத்தி விளைவிக்கப்படும் உணவுகளை உண்பதால் நோய் எதிர்ப்புச்சக்தி குறைந்து புதிய புதிய நோய்கள் வருகின்றன.
- உழவர், தம் மகன் திருமண விழாவில் ஊர்வலம் விடுவதற்காக யானையை இரவல் கேட்டார்.
- மரியாதை இராமன் உழவரை தனியாக அழைத்து “நாளை நீங்களாகவே நீதிமன்றத்திற்கு வரவேண்டாம். அந்த வணிகரை உங்கள் வீட்டிற்கு அனுப்புகிறேன். அவர் வரும்போது உங்கள் வீட்டுக் கதவிற்குப் பின் பழைய பானைகளை அடுக்கி வைத்து, கதவைத் தாழ்ப்பாள் போடாமல் வைத்திருங்கள். பின்னர், நடப்பதை நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளலாம்” என்று கூறினார்.
- யானைக்கும் பானைக்கும் சரி என்ற கதை உணர்த்தும் நீதி என்ன?ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு.
- நீதி நூல்களுள் ஒன்று நன்னெறி.
- இந்நூலைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றினார். நாற்பது நேரிசை வெண்பாக்கள் இந்நூலில் உள்ளன.
- ஒவ்வொரு வெண்பாவும் ஒவ்வோர் உவமை மூலம் ஒவ்வொரு நீதிக்கருத்தை விளக்குவது இந்நூலின் சிறப்பாகும்.
- கடலானது கதிரவனின் வெப்பத்தைக் கண்டு பொங்காது. குளிர்ச்சி பொருந்திய நிலவின் ஒளி கண்டுதான் பொங்கும்.
- அதுபோலக் கடலால் சூழப்பட்ட இப்பெரிய உலகில் வாழும் மக்கள் இன்சொற்களைக் கேட்டு மகிழ்வார்களே அன்றி, வன்சொற்களைக் கேட்டு மகிழ மாட்டார்கள் என்று நன்னெறி கூறுகிறது.
- “இதற்கு முன் ஒரு முதலை, விலங்குகளைச் சாப்பிட்டதால் செரிமானம் ஆகாமல் இறந்துவிட்டது.”
- “விஷ முறிவுச் செடிகளை நாங்கள் தின்றுள்ளதால், எங்களை யார் கடித்தாலும் அவர்கள் இறந்துவிடுவர்” என்று நரி முதலையிடம் கூறியது.
- காட்டில் வாழ்ந்த விலங்குகள் நரி, மான், ஓநாய், வரிக்குதிரை.
- பனிமலைக் காட்டில் நடைபெறும் திருவிழாவிற்கு வரும்படி விலங்குகளை அழைத்தது சிறுத்தை .

- “சென்றவாரம் விலங்குகளைச் சாப்பிட்ட ஒரு முதலை செரிமானம் ஆகாமல் இறந்து போய்விட்டது. அதற்குத் தயார் என்றால் நீங்கள் சாப்பிடுங்கள்” என்றது நரி.
- “வழியில் பாம்பு கடித்தால் எங்களுக்கு விஷம் ஏறாமல் இருக்க நாங்கள் விஷமுறிவுச் செடிகளைத் தின்று வந்திருக்கிறோம். அதனால் எங்களை யார் கடித்தாலும் அல்லது நாங்கள் யாரைக் கடித்தாலும் அவர்கள் இறப்பது உறுதி” என்று கூறிக் கொண்டே ஒரு மீனைக் கடித்தது. மீன் இறந்து விட்டது.
- இதனால் முதலையிடமிருந்து விலங்குகள் உயிர் பிழைத்தன.
- காலில் அடிபட்டதால் நாய் நொண்டி நொண்டி நடந்து கொண்டிருந்தது. அதனால் குதிரை நாய்க்கு உதவி செய்தது.
- நாய், குதிரையின் மேலே அமர்ந்துகொண்டு குதிரையிடம் விவாதம் செய்து கொண்டு சத்தமாகக் குரைத்தது. ஆதலால் காவலர்கள் நாயைக் கீழே இறக்கிவிட்டனர்.
- கிராமங்களின் முன்னேற்றத்தையும், மக்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டியும், மன்னர் தமது குதிரையில் பயணம் மேற்கொண்டார்.
- ஒரு நாய் நடக்க முடியாமல் தத்தித் தத்திச் சென்று நடந்து கொண்டிருந்தது. நாயை தன் முதுகில் ஏற்றிக் கொண்டு, அது செல்ல வேண்டிய இடத்தில் விட்டுவிடலாமா என்று குதிரை அனுமதி கேட்டது.
- “குதிரையே! என்னைப் போலவே நீயும் இரக்கத்துடன் செயல்படுகிறாய்! அந்த நாய்க்கு உதவுவதில் உனக்கு இருக்கின்ற மகிழ்ச்சியைப் போன்றே எனக்கும் இருக்கின்றது” என்று மன்னர் குதிரையிடம் கூறினார்.
- “நாயே! அமைதியாக இருந்துகொள்! நீ குரைத்துக் கொண்டே வந்தால் எல்லாரும் உன்மீது வெறுப்படைவார்கள். அதன் பின்னர், நீ என்மீது சவாரி செய்ய முடியாது” என்றது குதிரை.
- “நாய்! குரைத்துக் கொண்டே வந்ததால் காவலர்கள் அதனை இறக்கிவிட்டனர். சற்றுத் தொலைவில் போய் நின்றுகொண்டு நாய் திரும்பிப் பார்த்தது; தான் இல்லாதபோதும் குடிமக்கள் எல்லாரும் மன்னரை வணங்க, மன்னரும் அவர்களுக்குப் பதில் வணக்கம் தெரிவித்தார். இக்காட்சியைப் பார்த்த நாய்க்கு அப்போதுதான் உண்மை புரிந்தது. தன்னுடைய தவற்றினை நினைத்து வருந்தியது.
- நிறை உடையவராக இருக்கும் தன்மை தம்மைவிட்டு நீங்காமலிருக்க வேண்டுமானால், பொறுமையைப் போற்றி ஒழுக வேண்டும். அப்போது பொறையுடைமை போற்றப்படும்.
- எப்பொருளையார் யாரிடம் கேட்டாலும் கேட்டவாறே, எடுத்துக் கொள்ளாமல் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவு என வள்ளுவர் கூறுகிறார்.
- நாவைக் காக்கத் தவறினால் சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.

- ஒருவன் தன்னைத்தானே காக்க விரும்பினால் சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும்.அவ்வாறு காத்துக் கொள்ளாவிட்டால், சினம் தன்னையே அழித்துவிடும்.
- எனக்குப் பிடித்த கதை 'பொறுமையும் பொறுப்பும்' .
- இக்கதை மூலம் பொறுமையின் சிறப்பை உணர முடிகிறது. எடிசன் தன் பணியாளரிடம் பொறுமையாக செயல்பட்டு, பணியாளருக்குப் பொறுப்பாக இருப்பதன் அவசியத்தை உணர்த்தியுள்ளார். அதனால் இக்கதை எனக்குப் பிடிக்கும்.
- திருக்குறள் முதன் முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு 1812.
- திருக்குறள் அகர எழுத்தில் தொடங்கி னகர எழுத்தில் முடிகிறது.
- திருக்குறளில் இடம்பெறும் இருமலர்கள் அனிச்சம், குவளை.
- மனுநீதிச் சோழன் தனது ஆட்சியில் குடிமக்கள் யாரும் துன்பப்படக் கூடாது என்று நினைத்தான். அதனால் ஆராய்ச்சி மணியை அமைத்தான்.
- அரசனின் மகன் தேரைத் தெருவில் ஓட்டிச் செல்லும் போது, அங்குத் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த பசுவின் கன்று எதிர்பாராத வகையில் தேர்க்காலில் மாட்டி இறந்துவிட்டது. அதனால் துயருற்ற பசு ஆராய்ச்சி மணியை அடித்தது.
- பசுவின் துயரைப் போக்க எண்ணிய மன்னன், தன் மகனை அதே தேர்க்காலில் இட்டுக் கொன்று பசுவின் துயரைப் போக்கினான்.
- மனுநீதிச் சோழன் சோழ மன்னர்களுள் ஒருவன்.
- *முறைமை தவறாது ஆட்சி புரிவதையே தன் நோக்கமாகக் கொண்டவன்.*
- அவனுடைய ஆட்சிக் காலத்தில் வாயில்லாப் பசுவுக்கு ஏற்பட்ட
- பேரிழப்பைத் தன் மகனைக் கொன்று சரிசெய்தவன். நீதியையே தன் பெயரில் வைத்துள்ளவன்.
- ஆராய்ச்சிமணியின் நோக்கம் உடனுக்குடன் நீதி வழங்குவது என்றும், குடிமக்கள் எப்போது ஆராய்ச்சி மணியை ஒலித்தாலும் அவர்கள் முன் தானே ஓடோடிச் சென்று, அவர்களின் மனக்குறையை உடனடியாகத் தீர்த்து வைப்பேன் என்றும் மனுநீதிச் சோழன் கூறினான்.
- அரசனின் மகன் தேரைத் தெருவில் ஓட்டிச் செல்லும்போது, அங்குத் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த பசுவின் கன்று, எதிர்பாராத வகையில் தேர்க்காலில் மாட்டி இறந்தது.
- "நீயும் ஒரு மன்னனா? உனக்கு மகன் எப்படியோ அப்படியே எனக்கு என் கன்று அல்லவா? அந்தச் சின்னஞ்சிறு கன்று என்ன பாவம் செய்தது? அதன் உயிரைப் போக்க உங்களுக்கு எப்படி மனம் வந்தது? கன்றை இழந்து தவிக்கும் எனக்கு யார் ஆறுதல் தருவார்? இனி என் வாழ்நாளெல்லாம் வீண்தானோ என்று கேட்பது போல் இருக்கிறது" என்று பசுவின் எண்ணத்தை மன்னர் வெளிப்படுத்தினார்.
- அழகாபுரி மன்னர், அமைச்சர், விறகு வெட்டி என்ற வேறுபாடின்றி அனைவரையும் சமமாக நடத்தினார்.

- ‘மன்னர், விறகு வெட்டியான தனக்கு நாள்தோறும் இரண்டு ரூபாய் கூலியும் அமைச்சருக்கு மாதத்திற்கு ஆயிரம் ரூபாயும் கொடுப்பதாகவும் அதுவே தம் மனக்குறை என்று விறகு வெட்டி மன்னரிடம் கூறினார்.
- “அரண்மனைக்கு வெளியே ஏதாவது வண்டி செல்கிறதா?” என்று பார்த்து வரும்படி மன்னர் அமைச்சரிடமும் விறகு வெட்டியிடமும் கூறினார். அதற்கு அமைச்சர் ஒருமுறையே வெளியே சென்று வந்து பல பதில்களைக் கூறினார். ஆனால் விறகு வெட்டியோ ஒவ்வொரு முறையும் சென்று வந்து மன்னரிடம் பதில் அளித்தான்.
- “நானும் சிறந்த முறையில்தானே ஆட்சி நடத்துகிறேன். ஆனால், என்னை மட்டும் ஏன் யாரும் புகழவில்லை ” என்று அமைச்சர்களிடம் வினவினார்.
- “நான் சொல்வதைத் தவறாக நினைக்காதீர்கள். அழகாபுரி நாட்டுக்குச் சென்று, ஒருநாள் முழுவதும் அந்த நாட்டு மன்னருடன் நீங்கள் உடனிருக்க வேண்டும். அவர் தம் நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமக்களிடமும் எப்படி நடந்து கொள்கின்றார் என்று அறிந்து கொண்டால், நாமும் அவற்றுள் சிலவற்றையாவது பின்பற்றலாம் மன்னா” என்று அமைச்சர் மன்னரிடம் கூறினார்.
- “மன்னா, என் மனக்குறை நீங்கிவிட்டது. உங்களைப் பற்றித் தவறாக எண்ணிவிட்டேன். அமைச்சரின் அறிவுக் கூர்மையையும் அவருடைய திறமையையும் கண்டுவியக்கிறேன். அவருடன் ஒப்பிடும்போது என் அறியாமையையும் நான் உணர்ந்து கொண்டேன். நான், நான்தான். அமைச்சர், அமைச்சர்தாம். அவரவர் திறமைக்கேற்ற வேலைக்கேற்ற கூலி கொடுப்பதுதான் நியாயம் என்பதைப் புரிந்து கொண்டேன்” என்றான் அந்த விறகுவெட்டி.
- பறவைக் கப்பல் எனக் குறிப்பிடப்படுவது செயற்கைக்கோள்கள்.
- ஆழிப்பேரலை போன்ற பேரழிவுகள் வருவதற்கு முன்பே அறிவித்து மனித உயிர்களைக் காக்கிறது.
- செயற்கைக்கோள் உயர உயரப் பறந்து நற்பயனைத் தருகிறது.
- செயற்கைக்கோள் விண்வெளி ஆய்வு செய்வதற்கு விண்ணில் சீறிப் பாயும்.
- செயற்கைக்கோள் மண்ணிலுள்ள வளத்தை உண்மையாகச் சொல்லிடும்.
- செயற்கைக்கோள் தன்னிச்சையாக இயங்கிடும்.
- செயற்கைக்கோள் வானில் சுற்றும் கோள்களை நிழற்படம் எடுத்திடும்.
- செயற்கைக்கோள் விண்வெளி ஆய்வு செய்கிறது.
- வானிலை குறித்த தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள முடிகிறது.
- வானில் சுழலும் கோள்களை நிழற்படம் எடுத்து, நமக்கு அனுப்புகிறது.
- கனிம வளத்தையும் கடல் வளத்தையும் குறிப்பிடுவதோடு, ஆழிப்பேரலை போன்ற பேரழிவுகள் வருவதற்கு முன்பே அறிவித்து, மனித உயிர்களைக் காக்கிறது.

- ❖ ஆசிரியர் வைத்திருந்த அழைப்பிதழில் 'அறிவியல் திருவிழா' பற்றிய செய்தி இருந்தது.
- ❖ "வழக்கமான ஆய்வுகள் போல் அல்லாமல், புதுமையாக முயற்சி செய்யுங்கள். பரிசு பெறுவதனைவிட, உங்களுடைய மாறுபட்ட சிந்தனைக்கு முன்னுரிமை தாருங்கள். அதனையே செயல்படுத்துங்கள்" இவ்வாறு மாணவர்களை ஆசிரியர் ஊக்கப்படுத்தினார்.
- ❖ விழா அரங்கின் வாசலில் நெடிதுயர்ந்து நின்ற உருவம் முழுவதும் பயன்படுத்தித் தூக்கி எறியப்பட்ட மின்னணுக் கழிவுகளால் செய்யப்பட்டிருந்தது.
- ❖ பழுதான கணினிகளின் பகுதிப் பொருள்கள் ஓர் அரக்கனின் வடிவில் உருவாக்கப்பட்டிருந்தன. அதன் மார்புப் பகுதியில் ஒரு மடிக்கணினி பொருத்தப்பட்டிருந்தது.
- ❖ தோள்பட்டையில் ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது. அரக்கன் பேசுவதுபோல் அமைக்கப்பட்டிருந்தது.
- ❖ ஒவ்வொரு நாளும் உங்களால் தூக்கி எறியப்படும் மின்னணுக் கழிவுகள் நிலத்தையும் சுற்றுச்சூழலையும் பெரிதும் சீர்கேட்டுக்கு உள்ளாக்குகின்றன.

- ❖ நாம் பயன்படுத்திய மின்னணுப் பொருள்களைத் தேவைக்குப் பயன்படுத்த வேண்டும்.
- ❖ கண்ட இடங்களில் தூக்கி எறிந்திடாமல் முறையாக மறுசுழற்சிக்கு உட்படுத்த வேண்டும்.
- ❖ ஆய்வுகள் மாணவர்தம் சொந்த முயற்சியாகவும் இதுவரை வெளிவராத புதிய முன்னெடுப்பாகவும் அமைதல் வேண்டும்.
- ❖ "மாசில்லாத உலகம் படைப்போம்!
- ❖ மகிழ்வான வாழ்வு பெறுவோம்"
- ❖ என்று அரக்க வடிவில் இருந்த உருவம் இறுதியாகப் பேசியது.
- ❖ முகிலன் பயன்படுத்தித் தூக்கி எறியப்பட்ட மின்னணுப் பொருள்களைப் பயன்படுத்தி நெடிதுயர்ந்த அரக்க வடிவில் ஓர் உருவத்தைப் படைத்தான். அது சுற்றுச்சூழல் மாசு அடைவது பற்றியும் அதற்கு மக்கள்தான் காரணம் என்றும் பேசுவது போல் அமைத்திருந்தான்.
- ❖ இப்படைப்பினால், அந்த ஆண்டிற்கான சிறந்த அறிவியல் படைப்புக்குரிய விருது, முகிலனது பள்ளிக்குக் கிடைத்தது.
- ❖ ஆதலால் மாணவர்களும், ஆசிரியர்களும், தலைமையாசிரியரும் முகிலனின் புதுமையான படைப்பைப் பாராட்டி மகிழ்ந்தனர்.
- ❖ காட்டில் நடந்த போட்டியின் பெயர் 'பாட்டுப்போட்டி' ஆகும்.
- ❖ காக்காவின் பாட்டைக் கேட்ட சிங்கராஜா "ஆகா…. என்ன சுருதி சுத்தம்; அற்புதம்!" என்று கூறினார்.
- ❖ 'பாட்டு ராணி' பட்டம் பெற்ற பறவை காகம்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- 'சிரிப்பொலியொன்று' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது சிரிப்பு+ஒலி+ஒன்று.
- மரக்கிளையில் குரங்கு ஒன்று உட்கார்ந்திருந்தது.
- காட்டில் பறவைகளுக்கான பாட்டுப்போட்டி நடந்தது.
- போட்டிக்கு வந்த பறவைகளின் பெயர்களை எழுதியது ஆந்தை.
- போட்டிக்கு நடுவராக இருந்த பறவை மயில்,
- மயில் ஒய்யாரமாகத் தோகை விரித்தபடி மேடையில் அமர்ந்தது.
- முதலில் பாடிய பறவை மைனா.
- இரண்டாவது போட்டியாளராக வந்த பறவை கிளி.
- - கிளி பாடத் தொடங்கியதும் விலங்குகளின் விசில் சத்தம் விண்ணைத் தொட்டது.
- வெட்கத்தோடு கீழே இறங்கிய பறவை சேவல்.
- தலையை முன்னும் பின்னுமாய் ஆட்டிக்கொண்டே பாடிய பறவை கழுகு.
- கழுகு பாடிய பாட்டு காடெங்கும் எதிரொலித்தது.
- கழுகின் பாட்டைக் கேட்டு பயந்தவை மான்குட்டிகள்.
- "இம்புட்டுத்தான் என் பாட்டு" என்று சொன்ன பறவை கொக்கு.
- நிறைய விலங்குகள் குயிலுக்கு இரசிகர்களாய் இருந்தன.
- கடைசிப் போட்டியாளராக வந்த பறவை காகம்.
- அமைதியாக இருந்த காட்டில் சேவல் அங்கு யாருமில்லை என்று எண்ணிக் கொண்டு மெலிதாய்க் குரல் எழுப்பிப் பாடிக் கொண்டிருந்தது.
- திடீரென சிரிப்பொலி கேட்டதும் சேவல் பயந்துகொண்டே "யார் சிரித்தது?" என்று கேட்டது. மரத்தின் மேலேயிருந்த குரங்கு , "என்ன பாட்டு பலமா இருக்கு. என்ன விசேஷம்?" என்று குரங்கு கேட்டது. சேவலுக்கு வெட்கம் வந்துவிட்டது.
- சேவல் "மறுநாள் பாட்டுப்போட்டி நடப்பதாகவும் அதற்குப் பயிற்சி எடுப்பதாகவும் கூறியது.
- "போட்டியில் பாடு. வெற்றி பெற வாழ்த்துகள்!" என்று குரங்கு கூறியது. சேவல் ரொம்ப நன்றி என்று தலையாட்டியது.
- குருவி, மற்ற பறவைகளிடம் "பாட்டுப்போட்டியில் நன்றாகவும் அதிக நேரமெடுத்தும் பாட வேண்டும். அனைவரும் இரசிக்கும்படியாகவும் இருக்க வேண்டும். அப்படியான பாடலைப் பாடுபவர்களுக்குப் பரிசு வழங்கப்படும்" என்று கூறியது.
- சேவல் "கொக்… கொக்… கொக்கரக்கோ … கோ…." என்று பாடியது.
- தூங்கிக் கொண்டிருந்த ஒன்றிரண்டு கரடிகளும் விழித்துக் கொண்டன. சேவலைப் பார்த்து, "தூங்கிறவங்களை எழுப்புறதே உன் பாட்டா இருக்கு. அருமையான பாட்டு. போதும்பா, நிப்பாட்டு!" என்று மற்ற பறவைகள் கத்தின. சேவல் வெட்கத்தோடு கீழே இறங்கியது.
- கழுகு தலையை முன்னும் பின்னுமாய் ஆட்டிக்கொண்டே பாடியது. அப்பாட்டு காடெங்கும் எதிரொலித்தது. மான்குட்டிகள் பயந்து

போய்விட்டன. சில பயத்தில் அழுதன. சில எழுந்து ஓடத் தொடங்கின. இதைப் பார்த்துச் சிரித்த யானைக்குக் கண்ணில் நீரே வந்து விட்டது.

- குயில் மேடைக்கு வந்தபோது, பறவை, விலங்குகள் எல்லாமும் எழுந்து நின்று கைகளைத் தட்டின. குயிலுக்கு நிறைய விலங்குகள் இரசிகர்களாய் இருந்தன. ஒவ்வொன்றாய் எழுந்து நின்று குயில் குமாரிக்குப் பூங்கொத்துகளைக் கொடுத்தன.
- காகம் மெல்லியக் குரலில் முதலில் பாட ஆரம்பித்தது. விலங்குகள் ஆச்சரியத்தோடு கவனித்தன. 'கா' என்ற ஓர் எழுத்திலேயே புதுப்புது ஆலாபனைகள். சுருதி கூட்டிப் பாடிக்கொண்டே இருந்தது. கேலி செய்த பறவைகளுக்கு என்னவோ போலாகிவிட்டது அவை அனைத்தும் எழுந்து பாட்டிற்கேற்ப ஆட்டம் போட்டது. புலி "பிரமாதம்" என்றது. சிங்கம் தலையாட்டி இரசித்தது.
- "பாருங்க. காக்கா பாட வர்றபோது கேலி செஞ்சீங்க. ஆனா, தயங்கி நிற்காம, விடாமுயற்சியோட பாடுச்சு. அது மட்டுமில்ல. நிறைய பயிற்சி எடுத்துப் புதுப்புது இராகத்தில் பாடியிருக்கு. எல்லாரும் கை தட்டி பாராட்டுற அளவுக்கு அரைமணி நேரம் பாடியிருக்கு. முயற்சியும் பயிற்சியும் இருந்தால் எல்லாராலும் பாட முடியும்னு இந்தப் போட்டி மூலமா காக்கா நிரூபிச்சுக் காட்டியிருக்கு. மற்றவர்களுக்குத் தன்னம்பிக்கையை ஊட்டியுள்ளது. இந்தப் பாட்டுப் போட்டியில் முதல் பரிசு வழங்கிப் பாராட்டுகிறேன்!" என்று தீர்ப்பு வழங்கியது. 'பாட்டுராணி' என்ற பட்டத்தைக் காகத்தின் தலையில் கிரீடமாய்ச் சூட்டியது.
- அடுக்குமாடிக் கட்டங்கள், மிகப்பெரிய சாலை, மெரினா கடற்கரை, விமான நிலையம், அண்ணா நூற்றாண்டு நூலகம், உயிர்க்காட்சிச் சாலை, பொழுதுபோக்கு மையங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஆகியவை சென்னையில் பூவிழி கண்டுகளித்த இடங்கள் ஆகும்.

கணினியின் முதன்மைப் பகுதிகள் :

i. மையச் செயல்பாட்டுப்பகுதி (CPU)
ii. கட்டுப்பாட்டகம் (Control Unit)
iii. நினைவகம் (Memory)
iv. உள்ளீடு மற்றும் வெளியீடு (Input and output)

- கணினிகளின் தொடர்ச்சியான வலை அமைப்புகள் சேர்ந்திருக்கும் இணைப்பே வலைத்தளம் அல்லது இணையம் எனப்படுகிறது.
- கணினிகளுக்கு இடையே இணையத்தின் வாயிலாகச் செய்யப்படும் தகவல் பரிமாற்றமே மின்னஞ்சல். இது தகவல்களைப் பரிமாறிக் கொள்ளப் பயன்படுகிறது.
- தரமணியில் தொழில்நுட்பப் பூங்கா உள்ளது.
- கணினியைக் கண்டுபிடித்தவர் சார்லஸ் பாப்பேஜ்.
- CPU என்பதன் தமிழ் விரிவாக்கம் மையச் செயல்பாட்டுப் பகுதி.

- Keyboard என்பதன் தமிழ்ச் சொல் விசைப்பலகை.
- இணையம் மூலமாகக் கடிதமும் எழுதலாம்.
- புலனம், முகநூல் போன்றவை வலைத்தளச் செயலிகள்.
- இணையத்தின் வாயிலாகச் செய்யப்படும் தகவல் பரிமாற்றம் மின்னஞ்சல் எனப்படும்.
- விசைப்பலகை, சுட்டி போன்றவை உள்ளீட்டுக் கருவிகள்.
- காட்சித்திரை, கணினி, அச்சுப்பொறி போன்றவை வெளியீட்டுக் கருவிகள்.
- எந்தவொரு நாட்டு நிகழ்வுகளையும் நாம் நேரடியாகக் காண உதவுவது இணையம்.
- கணினி என்பது நாம் தரும் உள்ளீடுகளைப் பெற்று அதனைச் செயல்படுத்தி அதற்கேற்ற வெளியீடுகளைத் தரும் ஒரு மின்னணு சாதனம்.
- கணினியை சார்லஸ் பாப்பேஜ் கண்டுபிடித்தார்.
- முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட கணினி அளவில் மிகப்பெரியது. அதனை எளிதாக ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்ல இயலாது.
- ஆனால், இப்போதோ கையடக்க வடிவிலே கூடக் கணினிகள் உருவாக்கப்படுகின்றன.
- கணினியின் மையச் செயல்பாட்டுப் பகுதி என்பது செய்நிரல் அடிப்படையில் கணிதச் செயல்பாடுகளை அமைக்கும்.
- கட்டுப்பாட்டகம் என்பது செய்திகளைத் திரளாகச் சேமித்து வைத்திருக்கும். செய்திகள்/ தகவல்களை நிலையாகச் சேமித்து வைக்கும் இடம்தான் நினைவகம்.
- மையச் செயலகம் ஒருங்கிணைந்த உள்ளீடு, வெளியீடு கருவிகளைத் தன்னுள் பெற்றிருக்கும்.
- விசைப்பலகை, சுட்டி போன்றவை உள்ளீட்டுக் கருவிகள்.
- காட்சித்திரை, கணினி அச்சுப்பொறி போன்றவை வெளியீட்டுக் கருவிகள்.
- கணினிக்குக் கொடுக்கும் தவல்கள் - தரவுகள்.
- தரவுகள் பதிவு செய்வது - பதிவேற்றம்
- தகவல் பெறுவது - பதிவிறக்கம்.
- கணினிகளுக்கு இடையே தகவல் பரிமாற்றம் செய்வதற்கு மின்னஞ்சல் பயன்படுகிறது.
- வலைத்தளச் செயலிகள் ;
  - (i) புலனம்
  - (ii) முகநூல்
  - (iii) சுட்டுரை.
- வலைத்தளச் செயலிகளைச் செயலி உருவாக்கம் சென்று நம் மின்னஞ்சல் முகவரி கொடுத்து உருவாக்கி நம் கருத்துகளைப் பதிவிடலாம் அல்லது பெறலாம்.

எங்கும் ஒலிக்கின்ற உன் ஒலி, அலையோசையால் எழுந்ததா அல்லது இடியோசையால் எழுந்ததா என்று எங்களுக்கு ஐயம் எழுகிறது.

- ❖ உன்னுள் உயர்ந்த மலையும் அடங்கிக் கிடக்கிறது. எண்ணில்லாத மீன் வளங்களையும் விலை மதிப்புடைய முத்துகளையும் கொண்டுள்ள நீ, சிப்பிகள் விளையாடுவதற்கும் உதவுகிறாய். இப்பூமியில் மழை பெய்வதற்குக் காரணமாகவும் இருக்கிறாய். அந்த மழைநீரைச் சேமித்து வைக்கும் பெரிய கலனாகவும் விளங்குகிறாய். ஆகவே, உன் பெருமைகளை எல்லாம் எடுத்துரைக்க வல்லவர்கள் இங்கு எவரும் இலர்.
- ❖ இப்பாடலைப் பாடியவர், கவிமணி தேசிக விநாயகனார். இவர், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேரூரில் பிறந்தவர். இவர், இனிமையும் எளிமையும் மிக்க பாடல்களை எழுதியமையால், கவிமணி என்று போற்றப்பெற்றார். நம் பாடப்பகுதியிலுள்ள பாடல், குழந்தைப்பாடல்கள் என்னும் தலைப்பில் முதற்பாடலாக அமைந்துள்ளது.
- ❖ நம் முன்னோர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் உணர்ந்து கூறிய வார்த்தைகளே பழமொழிகள் ஆகும்.
- ❖ செல்லம்மாவுக்கு மாம்பழம் தருவதாகக் கிளி கூறியது.
- ❖ மாங்காய் காய்க்கும் பருவத்தில் தோப்பிற்கு வரும் சிறுவர்களிடம் ஒரு படத்தை மரப்பொந்திலிருந்து எடுத்துக்காட்டும். அந்தப் படம் உணர்த்தும் பழமொழியைச் சிறுவர்கள் கூறிவிட்டால் அவர்களுக்கு ஒரு மாங்காய் பறித்துப் போடும். அதனால் அதைப் 'பழமொழிக் கிளி' என்று அழைக்கின்றனர்.
- ❖ பழமொழி பற்றிய நீதி நூல்: பழமொழி நானூறு.
- ❖ தோப்பில் உள்ள மரத்தில் மாங்காய்கள் காய்த்துத் தொங்கின.
- ❖ சிறுவர்கள் மாங்காய் பறிப்பதற்காகத் தோப்பிற்கு வருவார்கள்.
- ❖ கிளி பழையனூர் மாந்தோப்பில் இருந்தது. அதன் பெயர்: செல்லம்மா
- ❖ காகமும் மானும் இணைபிரியாத நண்பர்கள், அவர்களைப் பிரித்து மானைக் கொன்று தின்றுவிட வேண்டும் என எண்ணி நரி, காகத்திடம் இருந்து மானைப் பிரித்தது.
- ❖ நரியை நண்பனாக ஏற்றுக் கொண்ட மானிடம், "நண்பா, யாரையும் நம்பிவிடாதே! அது நமக்குத்தான் ஆபத்து" என்று காகம் கூறியது. மேலும் "கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய்" என்றது.
- ❖ நரி, மானை விவசாயி ஒருவரின் விளைச்சல் நிலத்திற்கு அழைத்துச் சென்றது.
- ❖ விவசாயி அருகில் வரும் வரை நீ இறந்தது போல அசையாமல் இரு. விவசாயி உன்னை வலையில் இருந்து விடுவித்தவுடன், நான் மரத்திலிருந்து 'கா கா' என்று குரல் கொடுக்கிறேன். உடனே தப்பித்து விடு என்றது காகம். அதன்படி மான் நடந்து கொண்டு நடித்தது. வேடன் விடுவித்தவுடன் காகம் கரைய மான் ஓடியது.

கல்வி. நமக்குப் புகழையும் தந்து நிற்கும். கல்வி கற்றால், நன்மையும் மென்மையும் நல்லருளும் நம்மை நெருங்கி வரும்.

- ஆகையால், கல்வியைக் குற்றம் நீங்க கற்றிட வேண்டும். ஆற்றலையும் நல்ல வளத்தையும் நாம் பெற வேண்டும். நாள்தோறும் கற்றிட, கற்பன யாவும் மனக்கணக்கைப் போல நெஞ்சில் பதியும். வெற்றி கிட்டும். புகழ் தோன்றும். விண்ணையும் அளக்கச் செய்யும். நம்மை விடியலாய் எழச் செய்யும். நம்மிடத்தே வலிமையையும் சேர்க்கும். மனத்தினில் தெளிந்த நல்லறிவை வளரச் செய்யும்.
- கண்ணகியின் கணவனான கோவலன் பாண்டிய மன்னனால் தவறான தீர்ப்பளிக்கப்பட்டு கொல்லப்பட்டான். இதுவே கண்ணகிக்கு ஏற்பட்ட துன்பம் ஆகும்.
- ஒரு புறாவுக்காக தன் உடலையே தந்த சிபி மன்னனும், பசுவிற்கு நீதி வழங்குவதற்காக, தன் மகனைத் தேர்காலில் இட்டுக் கொன்ற மனுநீதிச் சோழனும் வாழ்ந்த சிறப்புக்குரியது புகார் நகரம்.
- பொற்கொல்லன் கூறியதைக் கேட்டு ஆராயாமல் கோவலனுக்குத் தண்டனை அளித்தான் பாண்டிய மன்னன். ஆதலால் அவனுடைய வெண்கொற்றக்குடை வீழ்ந்தது.
- பசுவிற்கு நீதி வழங்க தன் மகனைத் தேர்க்காலில் இட்டவர் மனுநீதிச்சோழன்
- கண்ண கி கோவலனின் மனைவி
- பழியில்லாச் சிறப்பினையுடைய புகழ்மிக்கவன் மாசாத்துவான்
- புகார் நகரில் வாழ்ந்த மன்னர்கள் சோழ மன்னர்கள்
- பழிச்சொல்லுக்கு அஞ்சி உயிர் நீத்தவர் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன்
- கண்ணகி, அழுத கண்களோடும் தலைவிரி கோலத்துடனும் அரண்மனை வாயிலின் முன் நின்றாள்.
- தீங்கு செய்தால் தீமை விளையும்.
- சிலம்பின் பரல் முத்துகளால் ஆனது.
- கல்வி கண் போன்றது.
- நீதி தவறாதவன் அரசன்.
- ஏழைக்கிழவி பணப்பையுடன் வந்தாள்.
- உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

புறநானூறு என்னும் நூலில் அறப்போர் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. அரசன் ஒருவன் மற்றொரு நாட்டு அரசன்மீது போர் தொடுக்கும் முன்பு, பசுக்களையும், அறவோரையும், பெண்களையும், பிணியாளர்களையும் போர் நிகழும் இடத்தைவிட்டுப் புறத்தே போய்விடும்படி எச்சரித்த பின்னரே படையெடுப்பு நிகழும். இச்செய்தி முதுகுடுமிப்பெருவழுதியிடம் அமைந்திருந்ததாக நெட்டிமையார் என்னும் புலவர் பாராட்டுகிறார். மேலும்,



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

4. தண்ணென் கதிர் - இனிய சொல்

Answer:

1. இன்சொல் - இனிய சொல்
2. வன்சொல் - கடுஞ்சொல்
3. அழல்கதிர் - கதிரவனின் ஒளி
4. தண்ணென் கதிர் - நிலவின் ஒளி

❖ மேகத்திலுள்ள பேச்சு வழக்குச் சொற்களைக் குடையிலுள்ள எழுத்து வழக்குச் சொற்களுடன் இணைத்துக் காட்டுக.

1. ஒசந்த - உயர்ந்த
2. செவ்வா - செவ்வாய்
3. வாங்கியாந்த - வாங்கிவந்த
4, ஊற வச்சி - ஊற வைத்து
5. முறிச்சி - முறித்து
6. மொள்போட்ட - முளைக்க வைத்த

❖ ஒலி மரபுகளைப் பொருத்துக.

1. சிங்கம் – கூவும்
2. அணில் – அலப்பும்
3. மயில் – முழங்கும்
4. குயில் – கீச்சிடும்
5. குரங்கு – அகவும்

Answers:

1. சிங்கம் – முழங்கும்
2. அணில் – கீச்சிடும்
3. மயில் – அகவும்
4. குயில் – கூவும்
5. குரங்கு – அலப்பும்

❖ வினை மரபுகளைப் பொருத்துக.

1. நீர் – பறித்தாள்

TNTET-PAPER-1-COMPETITIVE EXAM TAMIL STUDY MATERIALS-9600736379 www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# 6 ஆம் வகுப்பு - தமிழ்
## முதல் பருவம்

## இன்பத்தமிழ்

- ஆசிரியர் பாரதிதாசன்.
- இயற்பெயர் சுப்புரத்தினம்.
- பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு முதலான புரட்சிகரமான கருத்துகளை பாடியுள்ளார்.
- இவர் புரட்சிக்கவி, பாவேந்தர் என்றும் போற்றப்படுகிறார்.

### சொல்லும் பொருளும்
- நிருமித்த - உருவாக்கிய, விளைவு - விளைச்சல், சமூகம் - மக்கள் குழு,

## தமிழ்க்கும்மி

- ஆசிரியர் பெருஞ்சித்திரனார்.
- இயற்பெயர் மாணிக்கம்.
- 'பாவலரேறு' என்னும் சிறப்பு பெயர் பெற்றவர்.
- கனிச்சாறு, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, நூறாசிரியம் முதலான நூல்களை இயற்றியுள்ளார்.
- தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்களை நடத்தினார்.

### சொல்லும் பொருளும்
- ஆழிப்பெருக்கு - கடல் கோள், மேதினி - உலகம், ஊழி - நீண்டதொருகாலப்பகுதி, உள்ளப்பூட்டு - அறிய விரும்பாமை.

## வளர் தமிழ்

### மூத்தமொழி
- "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" - பாரதியார்.
- "என்று பிறந்தவள் என்று உணராத இயல்பினளாம் எங்கள் தாய்" - என்று தமிழ்மொழியை வியந்தவர் பாரதியார்.

### வளமை மொழி
- தொல்காப்பியம் தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான நூல்.
- தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் மிகுந்தது தமிழ்மொழி.
- எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற சங்க இலக்கியங்களைக் கொண்டது.
- திருக்குறள், நாலடியார் போன்ற அற நூல்களைக் கொண்டது.
- சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களைக் கொண்டது.
- துளிப்பா, புதுக்கவிதை, கவிதை, செய்யுள் போன்றன தமிழ்க் கவிதை வடிவங்கள்.
- கட்டுரை, புதினம், சிறுகதை போன்றவை உரைநடை வடிவங்கள்.
- "தமிழென் கிளவியும் அதனோ ரற்றே" என்ற வரிகள் இடம்பெறுவது - தொல்காப்பியம்.
- "இதுநீ கருதினை ஆயின்" - சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம்.

### எளிய மொழி
- தமிழ் எழுத்துக்கள் பெரும்பாலும் வலஞ்சுழி எழுத்துக்களாகவே அமைந்துள்ளன.
- வலஞ்சுழி எழுத்துக்கள் - அ, எ, ஔ, ண, ஞ
- இடஞ்சுழி எழுத்துக்கள் - ட, ய, ழ

### சீர்மை மொழி
- சீர்மை என்பது ஒழுங்கு முறையைக் குறிக்கும் சொல்.

## ஆசியஜோதி

- ஆசிரியர் - தேசிய விநாயகனார்.
- கவிமணி என்னும் பட்டம் பெற்றவர்.
- ஆசிய ஜோதி, ஆங்கில மொழியில் எட்வின் அர்னால்டு என்பவர் எழுதிய 'லைட் ஆஃப் ஆசியா' என்னும் நுலைத் தழுவி எழுதப்பட்டது.
- இந்நூல் புத்தரின் வரலாற்றைக் கூறுகிறது.
- கும்பி - வயிறு, பூதலம் - பூமி

## மனித நேயம்

- இந்தியாவில் அமைதிக்கான முதல் நோபல் பரிசினைப் பெற்றவர் - அன்னை தெரசா.
- அமைதிக்கான இரண்டாம் நோபல் பரிசினைப் பெற்றவர் 'கைலாஷ் சத்யார்த்தி'.
- 'குழந்தைகளைப் பாதுகாப்போம்' என்னும் இயக்கத்தைத் தொடங்கியவர் கைலாஷ் சத்யார்த்தி.
- கைலாஷ் சத்யார்த்தி கடந்த முப்பது ஆண்டுகளில் எண்பத்து ஆறாயிரம் குழந்தைத் தொழிலாளர்களை மீட்டுள்ளார்.
- உலக குழந்தைகள் கல்வி உரிமைக்காக 103 நாடுகளில் 80,000 கி.மீ தூரம் நடைப்பயணம் சென்றுள்ளார்.

- ✓ குழந்தைகளைத் தொழிலாளர்களாக மாற்றுவது மனிதத் தன்மைக்கு எதிரான குற்றம். உலகத்தை குழந்தைகளின் கண் கொண்டு பாருங்கள். உலகம் அழகானது - கைலாஷ் சத்யார்த்தி.
- ✓ "வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல மற்றவர் மனதில் நீ வாழும் வரை" - அன்னை தெரசா.
- ✓ தமக்கென முயலா நொன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே - புறநானூற்று பாடல் அடிகள்.
- ✓ "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" - வள்ளலார்.

## முடிவில் ஒரு தொடக்கம்

- விபத்தில் மூளை செயலிழந்துவிட்ட தங்களது மகனின் இதயத்தை கொடையாகத் தந்த மருத்துவ தம்பதியினர் - அசோகன், புஷ்பாஞ்சலி.
- சிறுமிக்குப் பொருத்தப்பட்ட இதயத்திற்குரிய இளைஞனின் பெயர் ஹிதேந்திரன்.

### தகவல் துளி

- வ.உ.சிதம்பரனார் வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர் என்னும் பன்முகத்தன்மை கொண்டிருந்தார்.
- 1906 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் நாள் "சுதேசி நாவாய் சங்கம்" என்ற கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தார்.
- அன்பினில் இன்பம் காண்போம், அறத்தினில் நேர்மை காண்போம் - இவ்வரிகளை எழுதியவர். - புலவர்.அ.முத்தரையனார். மலேசியக் கவிஞர்.
- தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு - கவிமணி, இயல்பு நவிற்சி அணி.


Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- *1952,1957,1962 தேர்தல்களிலும் வெற்றிப் பெற்றார்.*
- *1934 ல் மே 12,13 ஆகிய தேதிகளில் கமுதியில் குற்றப்பரம்பரைச் சட்ட எதிர்ப்பு மாநாட்டை நடத்தனார். தொடர் போராட்டத்தால் 1948ல் அச்சட்டம் நீக்கப்பட்டது.*
- *1939 ல் ஜுலை எட்டாம் நாள் மதுரை வைத்தியநாத ஐயர் கோவில் நுழைவுப் போராட்டம் நடத்த திட்டமிட்டார்.*
- *ஜமீன் விவசாயிகள் சங்கம் ஏற்படுத்தினார்.*
- *உழுபவர்களுக்கே நிலம் என்றார்.*
- *பாரதமாதா கூட்டுறவுப் பண்டகசாலையை ஏற்படுத்தி விவசாயிகளின் விளைபொருள்களுக்குச் சரியான விலை கிடைக்கச் செய்தார்.*
- *பெண்தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டும் என்று போராடினார்.*
- *உலகப்போர் சமயத்தில் மத்திய பிரதேசத்தின் தாமோ என்னும் நகரில் உள்ள இராணுவச்சிறையில் அடைக்கப்பட்டுப் போர் முடிந்தபிறகுதான் விடுதலை செய்யப்பட்டார்.*
- *தன் வாழ்நாளில் ஐந்தில் ஒரு பங்கினைச் சிறையில் கழித்த தியாகச் செம்மல் முத்துராமலிங்கத்தேவர் ஆவார்.*
- *திருமணம் செய்து கொள்ளாமல் தியாக வாழ்வு வாழ்ந்தார்.*
- *விவேகானந்தரின் தூதுவராகவும், நேதாஜியின் தளபதியாவும் கருதப்பட்டார்.*
- *பெண்களை இழிவுப்படுத்தும் செயலான கூந்தல் நடைபாதை வரவேற்பை மறுத்தார்.*
- *கி.பி. 1963ல் அக்டோபர் 30 இறந்தார்.*
- *1936 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் விருதுநகரில் போட்டியிடப் பெருந்தலைவர் காமராசர் முன் வந்தார். நகராட்சிக்கு வரி செலுத்தியவர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும் என்னும் நிலை இருந்தது. எனவே ஓர் ஆட்டுக்குட்டியை வாங்கிக் காமராசர் பெயரில் வரி கட்டி அவரைத் தேர்தலில் போட்டியிட வைத்தார்.*

## கப்பலோட்டிய தமிழர்

- *பாடப்பகுதி ரா.பி. சேதுவின் கடற்கரையினிலே என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.*
- *இவர் 'சொல்லின் செல்வர்' என போற்றப்படுகிறார்.*
- *இவரது 'தமிழின்பம்' என்னும் நூல் இந்திய அரசின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் நூல்.*
- *ஆற்றங்கரையினிலே, கடற்கரையினிலே, தமிழ் விருந்து, தமிழகம் – ஊரும் பேரும், மேடைப்பேச்சு போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.*

- வா.உ.சி இயற்றிய நூல்கள் மெய்யறிவு , மெய்யறம்
- *சுதந்திரம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன் – திலகர்.*
- *வந்தே மாதரம் என்போம் எங்கள் மாநிலத்தாயை வணங்குதும் என்போம் – பாரதியார்.*

- பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் நெல்லையப்பர் கோவிலில் எழுந்தருளியுள்ள காந்திமதித் தாயைத் தரிசித்தார்.
- பிள்ளைப் பெருமாள் சீவைகுண்டத்துப் பெருமாளைப் பாடியுள்ளார்.
- ஆற்றுக்குத் தென்கரையில் நம்மாழ்வார் அவதார ஸ்தலமான ஆழ்வார்திருநகரி இருக்கிறது. பூர்வத்தில் இதற்குத் திருக்குருகூர் என்று பெயர். நம்மாழ்வார் தமது ஈடுபாட்டை ஆயிரம் தமிழ்ப்பாட்டில் (திருவாய்மொழியில்) வெளியிட்டார்.
- காயல்பட்டணத்தில் இருநூற்றைம்பது வருஷத்துக்கு முன் சீதக்காதி என்ற பெரிய வாணிகர் இருந்தார்.
- சங்கரன் கோயிலில் பெரிய சிவஸ்தலம், அம்பாள் கோமதித் தாய். கோமதித்தாய் பற்றி உண்மையான பக்தியும் தமிழ்ப் பண்பும் வாய்ந்த ஒரு பாடல். அதைப் பாடியவர் திருநெல்வேலி அழகிய சொக்கநாதர் ஆவார்.
- குற்றாலத்தைப் பற்றி திருஞானசம்பந்தர் ''நுண் துளி தூங்கும் குற்றாலம்'' என புகழ்ந்து பாடியுள்ளார்.
- குற்றாலத்தைப் பற்றி மாணிக்கவாசகரும் ஒரு பாடல் பாடியுள்ளார். அவை
  ''உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
  கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனி அமையும்
  குற்றாலத் துறைகின்ற கூத்தாஉன் குரைகழற்கே
  கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே!.
- குற்றாலத்தை பற்றி குற்றாலக் குறவஞ்சி என்னும் பெயரில் திரிகூட இராசப்பா கவிராயர் பாடியுள்ளார்.
- டி.கே.சி என அழைக்கப்படும் டி.கே. சிதம்பரநாதர் வழக்கறிஞர் தொழில் செய்தவர்; தமிழ் எழுத்தாளராகவும் திறனாய்வாளராகவும் புகழ் பெற்றவர்; இரசிகமணி, என்று சிறப்பிக்கப்பட்டவர்; இவர் தமது வீட்டில் 'வட்டத்தொட்டி' என்னும் பெயரில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தி வந்தார்.
- இவர் கடித இலக்கியத்தின் முன்னோடி, தமிழிசைக் காவலர், வளர்தமிழ் ஆர்வலர், குற்றால முனிவர் எனப் பலவாறாகப் புகழப்படுகிறார்.
- இப்பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள கட்டுரை இதய ஒலி என்னும் நூலில் இருந்து எடுத்தாளப்பட்டது.
- திருப்புகழ் என்னும் நூலைப் பாடியவர் அருணகிரிநாதர்.
- காவடிச்சிந்தை பாடியவர் அண்ணாமலையார்.

## இயல் இரண்டு

## புதுமை விளக்கு

- பாடல் : வையம் தகளியா வார்கடலே நெய்யாக
  வெய்ய கதிரோன் விளக்காகச் – செய்ய
  சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
  இடர்ஆழி நீங்குகவே என்று ---------------- பொய்கை ஆழ்வார்.

  சொல்லும் பொருளும் : வையம் – உலகம், சுடர்ஆழியான் – ஒளிவிடும் சக்கரத்தை உடைய திருமால்.

- பொய்கையாழ்வார் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள திருவெஃகா என்னும் ஊரில் பிறந்தவர்.
- நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள முதல் திருவந்தாதி பொய்கை ஆழ்வார் பாடியதாகும்.


Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# இயல் – 7
## இலக்கிய வகைச் சொற்கள்

- இலக்கிய வகைச் சொற்கள் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு வகைப்படும்.

### இயற்சொல்

- எளிதில் பொருள் விளங்கும் சொற்கள் இயற்சொல் எனப்படும்.
- (எ.கா.) கடல், கப்பல், எழுதினான், படித்தான்.

| | |
|---|---|
| மண், பொன் | பெயர் இயற்சொல் |
| நடந்தான், வந்தான் | வினை இயற்சொல் |
| அவனை, அவனால் | இடை இயற்சொல் |
| மாநகர் | உரி இயற்சொல் |

### திரிசொல்

- கற்றவர்களுக்கு மட்டுமே விளங்குபவையாகவும் இலக்கியங்களில் மட்டுமே பயின்று வருபவையாகவும் அமையும் சொற்கள் திரிசொல் எனப்படும்.
- (எ.கா.) வங்கூழ், அழுவம், சாற்றினான், உறுபயன் இவற்றிற்கு முறையே காற்று, கடல், சொன்னான், மிகுந்த பயன் எனப்பொருள் தரும்.

| | |
|---|---|
| அழுவம், வங்கம் | பெயர் திரிசொல் |
| இயம்பினான், பயின்றான் | வினைத் திரிசொல் |
| அன்ன, மான | இடைத் திரிசொல் |
| கூர், கழி | உரித் திரிசொல் |

### திசைச் சொல்

- சாவி, சன்னல், பண்டிகை, இரயில் முதலிய சொற்கள் தமிழில் வழக்கில் இருந்தாலும் இவை தமிழ்ச்சொற்கள் அல்ல. பிறமொழிகளில் இருந்து வந்து தமிழில் வழங்கி வருபவையாகும். வடமொழி தவிர பிற மொழிகளிலிருந்து வந்து தமிழில் இடம்பெறும் சொற்கள் திசைச் சொற்கள் எனப்படும்.

### வட சொல்

- வடமொழி எனப்படுவது சமஸ்கிருத மொழிச்சொற்கள் ஆகும். இவ்வாறு வடமொழியிலிருந்து வந்து தமிழில் இடம்பெறும் சொற்கள் வடசொற்கள் எனப்படும்.
- (எ.கா.) வருடம், மாதம், கமலம், விடம், சக்கரம்
- வடசொற்களைத் தற்சமம், தற்பவம் என இருவகையாகப் பிரிப்பர்.
- கமலம், அலங்காரம் என வடமொழியில் இருப்பது போன்றே தமிழில் எழுதுவது தற்சமம் என்பர். லக்ஷ்மி என்பதை இலக்குமி என்றும், விஷம் என்பதை விடம் என்றும் தமிழ் எழுத்துகளால் மாற்றி எழுதுவதைத் தற்பவம் என்பர்.

# அலகு – 8
## ஓரெழுத்து ஒருமொழி, பகுபதம், பகாப்பதம்

- ஈ, பூ, கை இவை ஒவ்வொன்றிற்கும் பொருள் உண்டு. இவ்வாறு ஓர் எழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவதை ஓரெழுத்து ஒரு மொழி என்பர்.
- நன்னூல் என்னும் இலக்கண நூலை எழுதிய பவணந்தி முனிவர் தமிழில் நாற்பத்திரண்டு ஓரெழுத்து ஒருமொழிகள் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். இவற்றில் நொ, து ஆகிய இரண்டு சொற்களைத் தவிர ஏனைய நாற்பது சொற்களும் நெடில் எழுத்துகளாக அமைந்தவை ஆகும்.

அதன் பயனும் மறைந்து வந்து, வந்தாள் என்னும் சொல்லால் பெண் என்பதையும் குறிப்பதால் இது மூன்றாம் வேற்றுமைப் புறந்து பிறந்த அன்மொழித்தொகை எனப்படும்.

- இவ்வாறு வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலை தொடர்களுள், அவை அல்லாத வேறு பிற சொற்களும் மறைந்து வருவது அன்மொழித்தொகை (அல்+மொழி+தொகை) எனப்படும்.

## தொகாநிலைத் தொடர்

- ஒரு தொடரில் இரு சொற்கள் வந்து அவற்றின் இடையில் எச்சொல்லும் எவ்வுருபும் மறையாமல் நின்று பொருள் உணர்த்தினால் அதனைத் தொகாநிலைத் தொடர் என்பர்.
- தொகாநிலைத்தொடர் ஒன்பது வகைப்படும்.

### 1. எழுவாய்த் தொடர்

- (எ.கா) மல்லிகை மலர்ந்தது. - இதில் மல்லிகை என்னும் எழுவாயைத் தொடர்ந்து மலர்ந்தது என்னும் பயனிலை அமைந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இ∴து எழுவாய்த் தொடர் ஆகும்.

### 2. விளித்தொடர்

- (எ.கா) நண்பா படி. - இதில் நண்பா என்னும் விளிப்பெயர் படி என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இது விளித்தொடர் ஆகும்.

### 3. வினைமுற்றுத் தொடர்

- (எ.கா) சென்றனர் வீரர். - இதில் சென்றனர் என்னும் வினைமுற்று வீரர் என்னும் பெயரைக்கொண்டு முடிந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இது பெயரெச்சத் தொடர் ஆகும்.

### 4. பெயரெச்சத் தொடர்

- (எ.கா) வரைந்த ஓவியம் - இதில் வரைந்த என்னும் எச்சவினை ஓவியம் என்னும் பெயர்ச்சொல் கொண்டு முடிந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இது பெயரெச்சத் தொடர் ஆகும்.

### 5. வினையெச்சத் தொடர்

- (எ.கா) தேடிப் பார்த்தான் - இதில் தேடி என்னும் வினையெச்சச் சொல் பார்த்தான் என்னும் வினைமுற்றுச் சொல் கொண்டு முடிந்து, இடையில் எச்சொல்லும் மறையாமல் வந்துள்ளதால் இது வினையெச்சத் தொடர் ஆகும்.

### 6. வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்

- (எ.கா) கவிதை எழுதினார். - இதில் ஐ என்னும் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்து பொருளை உணர்த்துவதால் இது வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் ஆகும்.

### 7. இடைச்சொல் தொடர்

- (எ.கா) மற்றுப் பிற - இதில் மற்று என்னும் இடைச்சொல் வெளிப்படையாக வந்துள்ளதால் இ∴து இடைச்சொல் தொடர் ஆகும்.

### 8. உரிச்சொல் தொடர்

- (எ.கா) சாலவும் நன்று - இதில் சால என்னும் உரிச்சொல் வெளிப்படையாக வந்துள்ளதால் இ∴து உரிச்சொல் தொடர் ஆகும்.

### 9. அடுக்குத்தொடர்

- (எ.கா) நன்று நன்று நன்று - இதில் ஒரே சொல் பலமுறை அடுக்கி வந்துள்ளதால் இ∴து அடுக்குத்தொடர் ஆகும்.

## புணர்ச்சி

5. 2008 - மின்சாரப்பூ (சிறுகதைகள்) - மேலாண்மை பொன்னுசாமி
6. 2010 - சூடிய பூ சூடற்க (சிறுகதைகள்) - நாஞ்சில் நாடன்
7. 2016 - ஒரு சிறு இசை (சிறுகதைகள்) - வண்ணதாசன்

✓ 'தென்னாட்டின் பெர்னாட்ஷா' என்று அழைக்கப்பட்டவர் அறிஞர் அண்ணா

✓ அஞ்சல் தலைகளின் கதை - எஸ்.பி. சட்டர்ஜி (மொழிபெயர்ப்பு - வீ.மு. சாம்பசிவன்)

✓ தங்கைக்கு - வரதராசன், தம்பிக்கு - அறிஞர் அண்ணா.

✓ இந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங்குழல்? - அமுதோன்.

✓ பிம்பங்களற்ற தனிமையில்
ஒன்றிலொன்று முகம் பார்த்தன
சலூன் கண்ணாடிகள். - நா. முத்துக்குமார்.

✓ வெட்டுக்கிளியின் சப்தத்தில்
மலையின் மௌனம்
ஒரு கணம் அசைந்து திரும்புகிறது - ஜப்பானியக் கவிஞர் பாஷோ

✓ எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி உள்ளே ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார். - வள்ளலார்.

✓ கட்டிலாக் கவிதை - free verse, உவமையணி - simile, உருவக அணி - metaphor

✓ சிற்பியின் மகள் - பூவண்ணம்

✓ அப்பா சிறுவனாக இருந்தபோது - அலெக்சாந்தர் ரஸ்கின் (தமிழில் நா.முகமது செரீபு)

✓ அந்தர தார்மய னேஎன ஐயறும் - சீவக சிந்தாமணி.

**சொல்லும் பொருளும்**

- ❖ அருகுற - அருகில்.
- ❖ முகமன் - ஒருவரை நலம் வினவி கூறும் விருந்தோம்பல் சொற்கள்.

**தகவல் துளி**

- விருந்தினர் ஒருவருக்கு ஒன்பது விருந்தோம்பல் செய்வது இல்லற ஒழுக்கம் என அதிவீரராம பாண்டியர் குறிப்பிடுகிறார்.
- ஒப்புடன் முகம் மலர்ந்தே
  உபசரித்து உண்மை பேசி ………………. விவேகசிந்தாமணி.

## மலைபடுகடாம்

- ஆசிரியர் - பெருங்கௌசிகனார்.
- இது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.
- 583 அடிகளைக் கொண்ட இது கூத்தராற்றுப்படை எனவும் அழைக்கப்படுகிறது.
- மலையை யானையாக உருவகம் செய்து மலையில் எழும் பலவகை ஓசைகளை அதன் மதமென்று விளக்குவதால் இதற்கு மலைபடுகடாம் என்று பெயர் பெற்றது
- நன்னன் என்னும் குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் பாடியது மலைபடுகடாம்.

**ஆற்றுப்படை**

ஆற்றுப்படுத்தும் கூத்தன், வள்ளலை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகிறோம், நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம்பெற்று வாழ்வாயாக என்று கூறுதல்.

**சொல்லும் பொருளும்**

- அசைஇ - இளைப்பாறி, கடும்பு - சுற்றம், ஆரி - அருமை, வயிரியம் - கூத்தர், இறடி - தினை, அல்கி - தங்கி, நரலும் - ஒலிக்கும், படுகர் - பள்ளம், வேவை - வெந்தது, பொம்மல் - சோறு.

## கோபல்லபுரத்து மக்கள்

- ஆசிரியர் - கி.ராஜநாராயணன்.
- கோபல்ல கிராமம் என்னும் புதினத்தைத் தொடர்ந்து எழுதப்பட்டக் கதையே கோபல்லபுரத்து மக்கள்.
- இவருடைய ஊர் இடைசெல் ஆகும்.
- **“கோபல்லபுரத்து மக்கள்” என்ற புதினம்** 1991 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதெமி பரிசினைப் பெற்றது. இவர் கரிசல் எழுத்தாளர் ஆவார்.
- இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.
- இவர் கரிசல் வட்டாரச் சொல்லகராதி ஒன்றை உருவாக்கியுள்ளார்.
- இவர் தொடங்கிய வட்டார மரபு வாய்மொழி புனைக்கதைகள், கரிசல் இலக்கியம் என்று அழைக்கப்படுகிறது.
- எழுத்துலகில் இவர் கி.ரா என்று குறிப்பிடப்படுகிறார்.
- கரிசல் இலக்கியம்
- கோவில்பட்டியைச் சுற்றிய வட்டாரப் பகுதிகளில் தோன்றிய இலக்கிய வடிவம் கரிசல் இலக்கியம். கரிசல் மண்ணின் படைப்பாளி கு.அழகிரிசாமி. கி.ரா வுக்கு முன் எழுதத் தொடங்கியவர்.
- கரிசல் எழுத்தாளர்கள் கு.அழகிரிசாமி, கி.ரா, பா.ஜெயபிரகாசம், பூமணி, வீரவேலுசாமி, சோ.தர்மன், வேல இராமமூர்த்தி.
- ‘மைக்கடல் முத்துக்கு ஈடாய் மிக்க நெல்முத்து‘ ………… முக்கூடற்பள்ளு.
- ‘கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
- அத்தமிக்கும் போது அரிசிவரும் -………………. காளமேகப்புலவர்.

- மேற்கண்ட சொற்களில் **வல்லினம் மிகும்போது ஒரு பொருளும் மிகாதபோது வேறொரு பொருளும்** வருவதை அறியலாம். நாம் பேசும்போது எழுதும்போதும் பொருள் மயக்கம் தராத வகையில் மொழியைப் பயன்படுத்துவதற்கு வல்லினம் மிகா இடங்களை அறிவது இன்றியமையாததாகும்.

### வல்லினம் மிகா இடங்கள்

| | |
|---|---|
| அது செய்.<br>இது காண். | அது, இது என்னும் சுட்டுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது. |
| எது கண்டாய்?<br>எவை தவறுகள்? | இவ்வினாப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது. |
| குதிரை தாண்டியது.<br>கிளி பேசும். | எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது. |
| அண்ணனோடு போ.<br>எனது சட்டை, | மூன்றாம், ஆறாம் வேற்றுமை விரிகளில் வல்லினம் மிகாது. |
| தந்தையே பாருங்கள்.<br>மகளே தா. | விளித் தொடர்களில் வல்லினம் மிகாது. |
| வந்த சிரிப்பு.<br>பார்த்த பையன் | பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது. |
| நாடு கண்டான்,<br>கூடு கட்டு. | இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது, |
| வரும்படி சொன்னார்.<br>பெறும்படி கூறினார். | படி என்று முடியும் வினையெச்சத்தில் வல்லினம் மிகாது. |
| வாழ்க தமிழ்<br>வருக தலைவா! | வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது. |
| குடிதண்ணீர், வளர்பிறை<br>திருவளர்ச்செல்வன் | வினைத்தொகையில் வல்லினம் மிகாது. |
| ஒரு புத்தகம், மூன்று கோடி | எட்டு, பத்து தவிர பிற எண்ணுப் பெயர்களுடன் புணரும் வல்லினம் மிகாது. |
| தாய்தந்தை, இரவுபகல் | உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது. |
| அன்று சொன்னார்.<br>என்று தருவார்.<br>அவராவது தருவதாவது.<br>யாரடா சொல்.<br>ஏனடி செல்கிறாய்?<br>கம்பரைப் போன்ற கவிஞர் யார்? | அன்று, இன்று, என்று, ஆவது, அடா, அடி, போன்ற என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது. |
| அவ்வளவு பெரியது.<br>அத்தனை சிறியது.<br>அவ்வாறு பேசினான்.<br>அத்தகைய பாடங்கள்.<br>அப்போதைய பேச்சு.<br>அப்படிப்பட்ட காட்சி<br>நேற்றைய சண்டை. | அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு, அத்தனை இத்தனை, எத்தனை,<br>அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு,<br>அத்தகைய, இத்தகைய, எத்தகைய,<br>அப்போதைய, இப்போதைய, எப்போதைய,<br>அப்படிப்பட்ட, இப்படிப்பட்ட, எப்படிப்பட்ட,<br>நேற்றைய, இன்றைய, நாளைய ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகாது. |


Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

| காய்ச்சீர் | | கனிச்சீர் | |
|---|---|---|---|
| அசை | வாய்ப்பாடு | அசை | வாய்ப்பாடு |
| நேர் நேர் நேர் | தேமாங்காய் | நேர் நேர் நிரை | தேமாங்கனி |
| நிரை நேர் நேர் | புளிமாங்காய் | நிரை நேர் நிரை | புளிமாங்கனி |
| நிரை நிரை நேர் | கருவிளங்காய் | நிரை நிரை நிரை | கருவிளங்கனி |
| நேர் நிரை நேர் | கூவிளங்காய் | நேர் நிரை நிரை | கூவிளங்கனி |

- காய்ச்சீர்களை "வெண்சீர்கள்" என்று அழைக்கிறோம்.
- மூவகைச் சீர்களை அடுத்து நேரசையோ அல்லது நிரையசையோ சேர்கின்ற பொழுது நாலசைச்சீர் தோன்றும்.

### அலகிட்டு வாய்ப்பாடு கூறுதல்

- நாம் எளிய முறையில் திருக்குறளை இங்கு அலகிடலாம்.
- வெண்பாவில் இயற்சீரும், வெண்சீரும் மட்டுமே வரும்; பிற சீர்கள் வாரா. தளைகளில் இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் மட்டுமே வரும்; பிற தளைகள் வாரா.
- ஈற்றடியின் ஈற்றுச் சீர் ஓரசைச் சீர்களில் முடியும்.

பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்க துடைத்து.

| வரிசை | சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|---|
| 1 | பிறர் / நா / ணத் / | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 2 | தக் / கது / | நேர் நிரை | கூவிளம் |
| 3 | தான் / நா / ணா / | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 4 | னா / யின் / | நேர் நேர் | தேமா |
| 5 | அறம் / நா / ணத் / | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 6 | தக் / க / | நேர் நேர் | தேமா |
| 7 | துடைத் / து | நிரைபு | பிறப்பு |

### தளை

- பாடலில், நின்ற சீரின் ஈற்றசையும், அதனையடுத்து வரும் சீரின் முதல் அசையும் பொருந்துதல் 'தளை' எனப்படும். இது ஒன்றியும் ஒன்றாமலும் வரும். அது ஏழு வகைப்படும்.

1. நேரொன்றா சிரியத்தளை ------------- மா முன் நேர்
2. நிரையொன்றா சிரியத்தளை ---------- விளம் முன் நிரை
3. இயற்சீர் வெண்டளை ---------- மா முன் நிரை, விளம் முன் நேர்
4. வெண்சீர் வெண்டளை ---------- காய் முன் நேர்
5. கலித்தளை -------------- காய் முன் நிரை
6. ஒன்றிய வஞ்சித்தளை ----------- தனி முன் நிரை
7. ஒன்றா வஞ்சித்தளை ------------ கனி முன் நேர்

### அடி

- இரண்டும் இரண்டிற்கு மேற்பட்ட சீர்களும் தொடர்ந்து 'அடி' எனப்படும். அவை ஐந்து வகைப்படும்.

- தமிழில் முதன்முதலில் வண்ணச்சிந்து பாடியதால் 'காவடிச் சிந்தின் தந்தை' என்று அண்ணாமலையார் அழைக்கப்பட்டார்.
- 18 வயதிலேயே ஊற்றுமலைக்குச் சென்று அங்குக் குறுநிலத்தலைவராக இருந்த இருதயாலய மருதப்பதேவரின் அரசவைப் புலவராகவும் இருந்தார்.
- வீரைத் தலபுராணம், வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம், சங்கரன்கோவில் திரிபந்தாதி, கருவை மும்மணிக்கோவை, கோமதி அந்தாதி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

- தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசைமரபே காவடிச் சிந்து எனலாம்.

சொல்லும் பொருளும்

ஜகம் - உலகம், புயம் - தோள், வரை - மலை, வன்னம் - அழகு, கழுகாசலம் - கழுகுமலை, த்வஜஸ்தம்பம் - கொடிமரம், சலராசி - கடலில் வாழும் மீன் முதலிய உயிர்கள், விலாசம் - அழகு, நூபுரம் - சிலம்பு, மாசுணம் - பாம்பு, இஞ்சி - மதில், உம்பர் - தேவர், புயல் - மேகம், கறங்கும் - சுழலும்.

## குறுந்தொகை

- குறுந்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- அகத்திணை சார்ந்த 401 பாடல்களை உடையது.
- 'நல்ல குறுந்தொகை' எனச் சிறப்பித்து உரைக்கப்படுகிறது.
- இந்நூலே முதலில் தொகுக்கப்பட்ட தொகை நூலாகக் கருதப்படுகிறது.
- இந்நூலை தொகுத்தவர் பூரிக்கோ ஆவார்.
- இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார்.
- வெள்ளிவீதியார் சங்ககால பெண்புலவர்களில் ஒருவர். சங்கத்தொகை நூல்களில் 13 பாடல்கள் இவரால் பாடப்பட்டவை.

## புறநானூறு

- புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்டது.
- புறம், புறப்பாட்டு என்றும் வழங்கப்படும். அகவற்பாக்களால் ஆனது.
- சங்க காலத்தில் ஆண்ட அரசர்களைப் பற்றியும் மக்களின் சமூக வாழ்க்கை பற்றியும் எடுத்துரைக்கின்றன.
- பாண்டிய மன்னருள் பெருவழுதி என்பவர் புலமை பெற்றவராகவும் இருந்திருக்கிறார்.
- கடற்செலவு ஒன்றில் இறந்துபோனமையால் இவர் "கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி" என்று பிற்காலத்தவரால் அழைக்கப்படுகின்றார்.
- இவர் புறநானூற்றில் ஒரு பாடலும் பரிபாடலில் ஒரு பாடலும் இயற்றியுள்ளார்.

**சொல்லும் பொருளும்**

தமியர் - தனித்தவர், முனிதல் - வெறுத்தல், துஞ்சல் - சோம்பல், அயர்வு - சோர்வு, மாட்சி - பெருமை, நோன்மை - வலிமை, தாள் - முயற்சி.

## வாடிவாசல்

- சி.சு.செல்லப்பா சந்திரோதயம், தினமணி ஆகிய இதழ்களில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

- ஆசிரியர் மாணிக்கவாசகர்.
- திருவாசகம் என்பது சிவபெருமான் மீது பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு ஆகும்,
- இதனை இயற்றியவர் மாணிக்கவாசகர்.
- சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக உள்ளது.
- 51 திருப்பதிகங்கள் உள்ளன.
- 658 பாடல்கள் அடங்கியுள்ளன.
- இந்நூலில் 38 சிவத்தலங்கள் பாடப்பெற்றுள்ளது.
- "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது முதுமொழி.
- திருச்சாழல் தில்லைக் கோவிலில் பாடப்பெற்றது.
- ஜி.யு.போப் திருவாசகம் முழுமையையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.
- மாணிக்கவாசகர் சைவ குரவர் நால்வரில் ஒருவர்.
- திருவாதவூரைச் சேர்ந்தவர்.
- அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றினார்.
- இவர் இயற்றிய நூல்கள் திருவாசகம், திருக்கோவையார்.

## இசைத்தமிழர் இருவர்

### சிம்பொனித் தமிழர் - இளையராஜா

- ராயல் ஃபில்ஹார்மோனிக் இசைக்குழுவுக்கு சிம்பொனி இசைக்கோலத்தை அமைத்து காட்டியவர் இளையராஜா
- தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் உள்ள பண்ணைப்புரத்தைச் சேர்ந்தவர்.
- அவருடைய இயற்பெயர் இராசையா,
- அன்னக்கிளி படத்தில் அறிமுகமானவர்.
- 1970 களின் தொடக்கத்தில் பிறமொழிப் பாடல்களைச் சுமந்து திரிந்த தமிழ்ச்செவிகள் விடுதலை பெற்று தமிழ்ப்பாடல்களை நோக்கித் திரும்பியதற்கு இளையராஜாவே காரணமெனலாம்.
- எப்படிப் பெயரிடுவேன்? என்னும் இசைத்தொகுப்பும் புல்லாங்குழல் இசைக்கலைஞர் ஹரிபிரசாத் சௌராஸியாவுடன் இணைந்து வெளியிட்ட காற்றைத் தவிர ஏதுமில்லை என்னும் இசைத்தொகுப்பும் இசையுலகின் புதிய முயற்சிகள் எனக் கொண்டாடப்பட்டன.
- மனித உணர்வுகளுக்கும் இசை வடிவம் கொடுக்க முடியும் என்பதை "இந்தியா 24 மணிநேரம்" என்னும் ஆவணக் குறும்படத்தின் பின்னணி இசையில் வெளிப்படுத்தினார்.
- மாணிக்கவாசகர் எழுதிய திருவாசகப் பாடல்களுக்கு 'ஆரட்டோரியோ' என்னும் இசை வடிவில் இசையமைத்தார்.
- இராஜாவின் ரமணமாலை, இளையராஜாவின் கீதாஞ்சலி என்னும் தமிழ் இசைத்தொகுப்புகளையும் கன்னட மொழியில் மூகாம்பிகை என்ற பக்தி இசைத் தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார்.
- பஞ்சமுகி என்ற கர்நாடகச் செவ்வியல் இராகம் அவர் உருவாக்கியதாகும்.
- 2018 ல் பத்ம விபூஷண் விருது.
- 1985,1987, 1989, 2009 - சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது (4 முறை)
- 2016 - சிறந்த பின்னணி இசைக்கான தேசிய விருது.
- 1980-81 தமிழகம் - கலைமாமணி விருது.
- 1988 - மத்தியப்பிரதேச - லதா மங்கேஷ்கர் விருது,
- 1995 - கேரளம் - நிஷாகந்தி சங்கீத விருது போன்ற விருதுகளைப் பெற்றவர்.
- பால்நிலாப் பாதை, வெட்ட வெளிதனில் கொட்டிக் கிடக்குது உள்ளிட்ட பல நூல்களை எழுதியிருக்கும் எழுத்தாளர் ஆவார்.


Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

- என் வாழ்க்கை என் கையில் - ஞாநி
- மனிதவாழ்வை மாற்றியமைத்த கண்டுபிடிப்பாளர்கள் - ஆர்.கே.வி. கோபாலகிருஷ்ணன், மொழிபெயர்ப்பு - அய்யாசாமி.
- ஒவ்வொரு புல்லையும் - இன்குலாப்
- மனோன்மணீயம் - பெ. சுந்தரனார்.
- தாமரை நெஞ்சம் - அகிலன்.
- சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்" - ஆர். பாலகிருக்ஷ்ணன்
- காவடிச் சிந்து - அண்ணாமலையார்.
- வாடிவாசல் - சி.சு. செல்லப்பா
- எழுத்து இதழ்த் தொகுப்பு - தொகுப்பாசிரியர் - கி.அ. சச்சிதானந்தன்.
- தலைமைச்செயலகம் - சுஜாதா
- விஞ்ஞானி - மீரா
- வானம் வசப்படும் - பிரபஞ்சன்
- அக்னிச்சிறகுகள் - அப்துல் கலாம்.
- அறிவியல் தமிழ் - வா.செ. குழந்தைசாமி,
- கணினியை விஞ்சும் மனித மூளை - கா. விசயரத்தினம்

## தகவல் துளி

- சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர் - அறிஞர் அண்ணா.
- தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர் -
- உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாடியவர் - பாரதிதாசன்
- பொதுவுடைமைக்கொள்கையின் முன்னோடிகளில் ஒருவர் - ஜீவா.
- 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று குறிப்பிடுவது - பிங்கல நிகண்டு.
- "அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்று குறிப்பிடுவது - புறநானூறு.
- தமிழ்கெழு கூடல் -
- "தமிழ் தழீஇய சாயலவர்" - கம்பர்
- முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ்மாலை" என்று குறிப்பது சிறந்தது.
- ✓ சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும் சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ? - நாமக்கல் கவிஞர்.
- ✓ பத்தாவது தடவையாக விழுந்தவனுக்கு முத்தமிட்டுச் சொன்னது பூமி ஒன்பது முறை எழுந்தவனல்லவா நீ - ஈரோடு தமிழன்பன்.
- ✓ எப்போதும் மத்தாப்பு கொளுத்தி விளையாடுகிறது மலையருவி - கழனியூரன்.
- ✓ உத்திகள் - strategies, சமத்துவம் - equality, தொழிற்சங்கம் - trade union, பட்டிமன்றம் - debate, பன்முக ஆளுமை - multiple personality, புனைபெயர் - pseudonym
- ✓ இந்தியாவில் வடமொழியில் எழுதப்பட்ட இதிகாசங்கள் இராமாயணம், மகாபாரதம். தமிழில் - கம்பராமாயணம், வில்லிபாரதம்.
- ✓ கிரேக்கமொழியில் எழுதப்பட்ட இதிகாசங்கள் ஹோமரின் இலியட், ஒடிசி இரு காப்பியங்களுமே பெண்ணுக்கு முதன்மை தருகின்றன.
- ✓ தமிழ்க் காப்பியங்கள் போருக்கு முதன்மை கொடுக்கவில்லை.
- ✓ பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
  பேணி வளர்த்திடும் ஈசன் - பாரதியார்.
- உ.வே.சா 1894 ஆம் ஆண்டு முதன் முதலாகப் பதிப்பித்து வெளியிட்டார்.
- பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட் என்பவரால் புறநானூறு (The four hundred songs of war and wisdom/an an-thology of poems form classical tamil, the purananuru) என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார்.

## படைப்பாக்க உத்திகள்

# 12 ஆம் வகுப்பு - தமிழ்
## இயல் - 4
## பண்டைய காலத்துப் பள்ளிக் கூடங்கள்

- ஆசிரியர் தமிழ்த்தாத்தா உ.வே.சா.
- மகாமகோபாத்தியாய, திராவிட வித்தியா பூஷணம், தாக்ஷிணாத்திய கலாநிதி உள்ளிட்ட பட்டங்களை பெற்றவர்.
- கும்பகோணம் அரசு கலைக்கல்லூரியிலும் சென்னை மாநிலக் கல்லூரியிலும் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர்.
- 1932 இல் சென்னைப் பல்கலைக்கழகத்தினால் டாக்டர் பட்டம் பெற்ற பெருமைக்குரியவர்.
- அவரின் திருவுருவச் சிலை சென்னை மாநிலக் கல்லூரியில் வங்கக்கடலை நோக்கி நிற்கும் வண்ணம் உள்ளது.
- சென்னையில் திருவான்மியூரின் இவர் பெயரில் நூலகம் உள்ளது.

- மில்டனின் 'சுவர்க்க நீக்கம்' என்ற நூலை தமிழில் மொழிபெயர்த்தவர் உயிரின மருத்துவருமான வெள்ளக்கால் ப. சுப்பிரமணியனார்..
- வரலாற்றாய்வாளரும் தமிழறிஞருமான மா. இராசமாணிக்கனார் மௌனகுருவிடம் கல்வி கற்றவர்.
- இரட்டை அர்த்தங்கள் மாண்டுபோகவில்லை என்னும் நூல் - பேராசிரியர் அ.கா. பெருமாள்.

| | |
|---|---|
| வித்தியாரம்பம் | கல்வித் தொடக்கம் |
| வித்தியாப்பியாசம் | கல்விப் பயிற்சி |
| உபாத்தியாயர் | ஆசிரியர் |
| அக்ஷராப்பியாசம் | எழுத்துப் பயிற்சி |
| கீழ்வாயிலக்கம் | பின்ன எண்ணின் கீழ்த்தொகை |
| மேல்வாயிலக்கம் | பின்ன எண்ணின் மேல்தொகை |
| குழிமாற்று | பெருக்கல் வாய்ப்பாடு |
| சீதாள பத்திரம் | தாழை மடல் |
| நவத்வீபம் | வங்காளத்தில் உள்ள ஓர் ஊர் |

### வித்தியாரம்பம்
- முதன்முதலில் ஐந்தாம் பிராயத்தில் வித்தியாப்பியாசம் செய்யும் பொழுது பெற்றோர் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாக கொடுத்து வந்தார்கள்.
- உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக்கொடுக்க, மாணாக்கன் அதனைப் பின்பற்றி சொல்லுவான்.
- இப்படி உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல அதை மாணக்கர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை 'முறை வைப்ப' தென்று கூறுவார்கள்.
- உபாத்தியாயருக்குப் பிரதியாகச் சில சமயங்களில் 'சட்டாம்பிள்ளை முறை' வைப்பதுண்டு.

### மையாடல்
- இங்ஙனம் மை தடவிப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவதனால் அக்ஷராப்பியாசத்தை 'மையாடல் விழா' என்று சொல்வார்கள்.
- 'ஐயான் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள் என்கிறது சீவகசிந்தாமணி.
- மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய் - தமிழ்விடு தூது.
- 'பிரபவாதி சுவடி' என்ற புத்தகத்தை பேராசிரியர் அ.கா. பெருமாள் எழுதினார்.

789. முத்தொள்ளாயிரம் வெளியிடப்பட்ட இதழ் - செந்தமிழ்
790. பவணந்தியாரை ஆதரித்த மன்னன் - சீயகங்கன்
791. நன்னூலில் உள்ள அதிகாரங்கள் - எழுத்து, சொல்
792. நன்னூலில் உள்ள நூற்பாக்கள் - 461
793. தமிழிலக்கிய வரலாற்றின் பொற்காலம் - சோழராட்சிக்காலம்
794. தண்டியலங்காரம் குறிப்பிடும் அணிகளின் எண்ணிக்கை - 35
795. தன்மையணியின் வேறுபெயர்கள் - இயல்புநவிற்சி அணி, தன்மை நவிற்சி அணி

**நாயக்கர் காலம்**

796. நாயக்கர் காலம் - கி.பி. 1350 முதல் 1750 வரை
797. மதுரையில் நாயக்கர் ஆட்சிக்கு அடிகோலியவர் - குமாரகம்பண்ணன்
798. சிற்றிலக்கியங்கள் - 96 வகைப்படும்
799. தமிழில் முதன் முதலாகத் தோன்றிய உலா நூல் - திருக்கயிலாய ஞான உலா
800. திருக்கயிலாய ஞான உலாவின் ஆசிரியர் - சேரமான் பெருமாள் நாயனார்

801. ஆளுடைபிள்ளையார் திருஉலா மாலையின் ஆசிரியர் - நம்பியாண்டார் நம்பி
802. திருக்குற்றால நாதர் உலாவின் ஆசிரியர் - திரிகூடஇராசப்பக்கவிராயர்
803. அந்தக கவி வீரராகவ முதலியார் இயற்றிய உலா நூல்கள் - திருவாரூர் உலா, திருக்கழுகுங்குன்றத்து உலா
804. ஏகாம்பரநாதர் உலாவின் ஆசிரியர் - இரட்டைப்புலவர்கள்
805. தூது இலக்கியம் - கலிவெண்பாவால் ஆனது
806. தூது இலக்கியங்களில் தலைசிறந்ததாகக் கருதப்படுவது - தமிழ்விடுதூது
807. காக்கை விடு தூதின் ஆசிரியர் - வெள்ளைவாரணனார்
808. மீனாட்சி சுந்தரம்பிள்ளை எழுதிய தூதுநூல் - தசவிடுதூது
809. தூதின் வகைகள் - அகத்தூது, புறத்தூது
810. தமிழ்விடு தூதின் ஆசிரியர் - பெயர் கிடைக்கபெறவில்லை
811. நெஞ்சுவிடுதூதின் ஆசிரியர் - கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியார்
812. அழகர் கிள்ளைவிடுதூதின் ஆசிரியர் - பலபட்டடைச் சொக்கநாதபுலவர்
813. வண்டுவிடு தூதின் ஆசிரியர் - கச்சியப்ப முனிவர்
814. சுப்ரதீபக்கவிராயர் இயற்றிய தூதின் பெயர் - கூளப்பநாயக்கன் விறலிவிடுதூது
815. பிள்ளைத்தமிழின் வேறுபெயர்கள் - பிள்ளைக்கவி, பிள்ளைப்பாட்டு
816. பிள்ளைத்தமிழின் இருவகைகள் - ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ்
817. பிள்ளைத்தமிழின் பருவங்கள் - 10
818. ஆண்பால் பிள்ளைத்தமிழின் பருவங்கள் - காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர்
819. பெண்பால் பிள்ளைத்தமிழின் பருவங்கள் - காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, கழங்கு, நீராடல், ஊசல்
820. பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முன்னோடி - பெரியாழ்வார்
821. பிள்ளைத்தமிழ் கழிநெடிலாசிரியச் சந்த விருத்தத்தால் ஆனவை
822. அம்புலிப் பருவம் - சாம, தான, பேத, தண்டம் எனும் நான்கு வகைகளில் பாடப்படும்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

1149. பதினென் கீழ்க்கணக்கு நூல்களுள் சமணர் எழுதிய நீதி நூல்கள் -நாலடியார், நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம், பழமொழி, ஏலாதி
1150. சமண சமயத்தைச் சார்ந்த பெருங்காப்பியங்கள் -சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி
1151. சமணர்கள் இயற்றிய இலக்கண நூல்கள்-நன்னூல், நம்பியகப் பொருள், யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கல விருத்தி, நேமிநாதம், வச்சணந்திமாலை.
1152. நன்னூல் ஆசிரியர் - பவணந்தி முனிவர்
1153. நம்பியகப் பொருளின் ஆசிரியர் - நாற்கவிராச நம்பி
1154. வச்சணந்தி மாலையின் ஆசிரியர் - குணவீரபண்டிதர்
1155. யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் - அமர்தசாகரர்
1156. சமணர்கள் இயற்றிய நிகண்டுகள் - சூடாமணி நிகண்டு, பிங்கல நிகண்டு, சேந்தன் திவாகரம்
1157. சூடாமணி நிகண்டின் ஆசிரியர் - மண்டல புருடர்
1158. சேந்தன் திவாகர நிகண்டுநூலின் ஆசிரியர் - திவாகர முனிவர்
1159. பிங்கல நிகண்டின் ஆசிரியர் - பிங்கல முனிவர்
1160. மேருமந்திர புராணத்தின் ஆசிரியர் - வாமனசாரியர்
1161. ஐஞ்சிறு காப்பியங்கள் சமணசமயத்தைச் சார்ந்தவை
1162. பெருங்கதையின் ஆசிரியர் -கொங்குவேளிர்
1163. பெருங்கதையின் மறுபெயர் - கொங்கவேள் மாக்கதை
1164. நிகண்டுகளில் பழமையானது- சூடாமணி நிகண்டு
1165. சேந்தன் திவாகரம் எழுதியவர் - திவாகரர்

## 8. பௌத்தர் தமிழ்த்தொண்டு

1166. பெருங்காப்பியங்களுள் பௌத்த சமயக்காப்பியங்கள் - மணிமேகலை, குண்டலகேசி
1167. திருப்பதிகம் எந்தச் சமயக்காப்பியம் - பௌத்த சமயக்காப்பியம்
1168. திருப்பதிகத்தின் ஆசிரியர் - ஆசிரியர் பெயர் தெரியவில்லை
1169. திருப்பதிகத்தில் கிடைத்துள்ள செய்யுட்கள் - 10
1170. சித்தாந்தக் தொகை பௌத்த சமய நூல்
1171. சித்தாந்தக் கொள்கையின் ஆசிரியர் - பெயர் கிடைக்கப்பெறவில்லை
1172. சித்தாந்தக் கொள்கையில் கிடைத்துள்ள பாடல்கள் - ஒரு சில
1173. அவிதர்மாவதாரம் பௌத்த சமய நூல்
1174. அவிதர்மாவதாரத்தின் ஆசிரியர் - புத்தத்தர்
1175. அவிதர்மாவதாரத்தை புத்தத்தர் தம் மாணவி சுமதி என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க இயற்றினார்
1176. வீரசோழியத்திற்கு உரை எழுதியவர் - புத்திரமித்திரரின் மாணவரான பெருந்தேவனார்

## 9. முகமதியர் தமிழ்த்தொண்டு

1177. சீறாப்புராணம் இயற்றியவர் - உமறுப்புலவர்
1178. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் - வள்ளல் சீதக்காதி
1179. முகமதியர்களின் தலைசிறந்த காப்பியம் - சீறாப்புராணம்
1180. சீறாப்புராணத்தில் உள்ள காண்டங்கள்-விலாத்தது காண்டம், நுபுவத்துக் காண்டம், ஹிஜ்ரத்து காண்டம்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

1705. உமர்கயாம் பாடல்களைத் தமிழில் மொழி பெயர்த்தவர் - கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை
1706. கவிமணி எவ்வாறு அழைக்கப்படுகிறார் - தொடக்கத்தில் குழந்தைக் கவிஞர் என்று
1707. கவிமணை இயற்றிய கவிதை நூல்களில் நாட்டுப்பாடல் மெட்டில் அமைந்த நூல் - தீண்டாதார் விண்ணப்பம்
1708. கவிமணி இயற்றிய எந்த நூல் பண்டைய மரபில் அமைந்துள்ளது - அழகம்மை விருத்தம்
1709. கவிமணிக்குக் கவிமணி என்ற பட்டத்தை வழங்கிய அமைப்பு எது? வழங்கியவர் - சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார்
1710. நாமக்கல் கவிஞர், வே. இராமலிங்கம்பிள்ளை எவ்வாறெல்லாம் போற்றப்படுகிறார் - காந்தியக்கவிஞர், காங்கிரஸ் புலவர்
1711. நாமக்கல் கவிஞர் இயற்றிய நூல்கள் - அவனும் அவளும், மலைக்கள்ளன், இலக்கிய இன்பம், தமிழன் இதயம், என் கதை, சங்கொலி, கவிதாஞ்சலி, தமிழ்த்தேர், பிரார்த்தனை, தாயார் கொடுத்த தனம், தேமதுரத்தமிழோசை, இசைத்தமிழ்.
1712. நாமக்கல் கவிஞரின் பாடல்களைத் திரட்டி வகைப்படுத்தி வெளியிட்டவர் - புலவர் தணிகை உலகநாதன்
1713. பாரதிதாசனின் இயற்பெயர் - கனகசுப்புரத்தினம்
1714. பாரதிதாசன் வாழ்ந்த காலம் - கி.பி. 1891 முதல் 1964 வரை
1715. பாரதிதாசன் தொடங்கி நடத்திய இதழின் பெயர் - குயில்
1716. பாரதிதாசனின் "புரட்சிக்கவி" என்ற நூல் எந்த நூலைத் தழுவி இயற்றப்பட்டது - "பில்ஹணீயம்" என்ற வடமொழி நூலை

1717. பாரதிதாசன் பாரதியார் முன் பாடிய முதல் பாடல் - எங்கெங்குக் காணினும் சக்தியடா
1718. பாரதிதாசன் இயற்றிய நூல்கள் சிலவற்றைக் குறிப்பிடு - பாரதிதாசன் கவிதைகள் தொகதி I. II. III பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, சேர தாண்டவம், குடும்ப விளக்கு, தமிழச்சியின் கத்தி, குறிஞ்சித்திட்டு, கண்ணகி புரட்சிக்காப்பியம், மணிமேகலை வெண்பா, எதிர்பாராத முத்தம், காதல் நினைவுகள், அமைதி, கழைக்கூத்தியின் காதலி, இளைஞர் இலக்கியம், சவுமியன, நல்லதீர்ப்பு, தமிழியக்கம், இருண்டவீடு, குறள் உரை, இசையமுது தொகுதி I, II போன்றன.
1719. பாரதியாரின் முப்பெரும் பாடல்கள் - கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம்
1720. இராவண காவியம் எழுதியவர் - புலவர் குழந்தை
1721. புலவர் குழந்தை எழுதிய இலக்கண நூல்கள் - யாப்பதிகாரம், தொடையதிகாரம்
1722. "தமிழ் வாழ்க" என்னும் நாடகத்தை எழுதியவர் - புலவர் குழந்தை
1723. புலவர் குழந்தை இயற்றிய வரலாற்று நூல்கள் - கொங்குநாடு, தமிழக வரலாறு, தீரன்சின்னமலை
1724. புலவர் குழந்தை எந்தெந்த நூல்களுக்கு உரை எழுதியிருக்கிறார் - திருக்குறள், தொல்காப்பியம் பொருளதிகாரம், நீதிக்களஞ்சியம்
1725. புலவர் குழந்தை இயற்றிய ஆராய்ச்சி நூல்கள் - திருக்குறளும் பரிமேலழகர் உரையும், பூவா முல்லை, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்
1726. புலவர் குழந்தை இயற்றிய கவிதை நூல்கள் - நெருஞ்சிப்பழம், அரசியல் அரங்கம், திருநாணாச்சிலேடை வெண்பா, உலகப்பெரியோன் கென்னடி, புலவர் குழந்தைப் பாடல்கள்
1727. புலவர் குழந்தை இயற்றிய கவிதை நாடகம் - காமஞ்சரி



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

1997. பக்தி இலக்கியத்தின் முன்னோடி எனப்படுபவர்

(I )நாயன் மார்களில் - (காரைக்கால் அம்மையார் திருமூலர்)

(II) ஆழ்வார்களில் - (முதல் ஆழ்வார் மூவரும்)

1998. தமிழ் மூவாயிரம் எனப் போற்றப்படும் நூல் - திருமந்திரம் (திருமூலர்)

1999. நுட்பமான தத்துவ கருத்துக்களும் யோக நெறி கருத்துக்களும் அடங்கிய நூல் - திருமந்திரம்

2000. பக்தியோகம், தவம், ஞானம், மருத்துவம் முதலியவற்றை உணர்த்தும் நூல் - திருமந்திரம்

2001. காரைக்கால் அம்மையாரின் வாழ்வில் சிறப்பிடம் பெற்றக் கனி - மாங்கனி

2002. பேய் உருவத்துடன் காரைக்கால் அம்மையார் முக்தி பெற்ற இடம் - திருவாலங்காடு

2003. தமிழில் உள்ள மிகவும் பழமையான சைவ சமய பக்தி பாடல் - காரைக்கால் அம்மையார்பாடல்கள்

2004. அன்பே தகளிர் ஆர்வமே நெய்யாக என்று பாடியவர் - பூதத்தாழ்வார்

2005. மலையில் நின்றும் நீரில் மூழ்கியும் நெருப்பில் நின்றும் இறைவனை வழிப்பட தேவையில்லை என்று கூறியவர் - பேயாழ்வார்

2006. சம்மந்தரின் காலம் - 7 ஆம் நூற்றாண்டு (1,2,3 முதல் மூன்று திருமுறைகள்)

2007. திருநாவுக்கரசர் காலம் - 7 ஆம் நூற்றாண்டு (4, 5, 6 திருமுறைகள்)

2008. சுந்தரின் காலம் -8 ஆம் நூற்றாண்டு (7ம் திருமுறைகள்)

2009. காரைக்கால் அம்மையாரின் காலம் - 6 ஆம் நூற்றாண்டு

2010. மூவர் தேவாரத்தில் உள்ள பாடல் எண்ணிக்கை - 8000

2011. கையில் தாளம் ஏந்தி ஆடி, பாடி இறைவனை வழிப்பட்டவர் - திருஞானச்சம்மந்தர்

2012. கையில் உளவார படை ஏந்தி துப்பறிவு பணி செய்தவர் - திருநாவுக்கரசர்

2013. சங்க இலக்கியத்திற்கு பிறகு இயற்கை வருணனைகளை அதிகம் வைத்து பாடியவர் - திருஞானசம்மந்தர்

2014. திருவையாற்றில் புகழ்பெற்ற விலங்கு - குரங்கு

2015. சம்மந்தர் ஒவ்வொரு பதிகத்திலும் ராவணன் கைலாயமலையை தூக்கி துன்புறும் காட்சியை பாடும் பாடல் - 8 ஆம் பாடல் (சம்மந்தர்)

2016. ஒவ்வொரு பதிகத்திலும் 9 ஆம் பாடலில் சம்மந்தர் கூறும் செய்தி - திருமால், பிரமன் அடிமுடி தேடியக்காட்சி

2017. சம்மந்தர் 10 ஆம் பாடலில் கூறும் செய்தி - பௌத்த, சமண சமய பழிப்புரைகள்

2018. சம்மந்தர் 11ம் பாடலில் கூறும் செய்தி - தன் பெயரை பெருமையாக பேசுகின்றார்

2019. சைவ திருமணத்தின் போது தவறாமல் ஓதப்படும் பதிகம் - மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

2020. கோள்கள் அனைத்தும் மிகவும் நல்லவையே அவை ஒரு தீங்கும் செய்யமாட்டார் எனப் பாடியவர் - திருஞானச்சம்மந்தர்

2021. ஆணை நமதே எனப் பாடுபவர் - திருஞானச் சம்மந்தர்

2022. முருகனின் அவதாரமாக போற்றப்பட்டவர் - திருஞானச் சம்மந்தர்

2023. இசையோடு பாடல் பாடுவதற்கு பின் வகுக்கப்பட்ட காலம் - சம்மந்தர்க்காலம்

2024. எமகம், மடக்கு முதலிய சொல் அடிகளை பாடியவர் - திருஞானச்சம்மந்தர்

2025. சம்மந்தரை திராவிட சிசு எனப் போற்றப்பட்டவர் - ஆதிச்சங்கரர்

2026. கவுணியர் என்று அழைக்கப்படுபவர் - சம்மந்தர்

2027. வாசீகர் தாண்டக வேந்தர் மருழ்நீக்கியார், தருமசேனர், அப்பர், என்றெல்லாம் அழைக்கப்பெற்றவர் - திருநாவுக்கரசர்

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2292. பட்டினத்தாரின் காலம் - 10,11 ம் நூற்றாண்டு

2293. பட்டினத்தாரின் நூல்கள் - கோயில் நான்மணிமாலை, திருகழுமல மும்மணிமாலை, திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது

2294. பட்டினத்தாரின் மாணவர் - பத்திரகிரியார்

2295. தமிழில் வடச்சொற்களை மிகுதியாக கலந்தவர்கள் - வில்லிப்புத்தூரார், அருணகிரிநாதர், குமரகுருபரர் பிரபந்தவேந்தர்

2296. சந்தபாடல்கள் பாடுவதில் இணையானவர் - அருணகிரிநாதர்

2297. இசைவுலகில் "லையம்" என்னும் தாள வகைகள் நிறைந்த களஞ்சியமாக பாடும் நூல் - திருப்புகழ்

2298. லையம் என்பவை - தன்னை மறந்த லையம், தண்ணீல் மறைந்த லையம்

2299. தேவாரக் காலத்திற்கு பிறகு அதிக அளவில் பாடப்பெற்று வரும் புகழ்பெற்ற பக்தி பாடல்கள் நூல் - திருப்புகழ்

2300. திருப்புகழ் பாடல்களின் தன்மை - முன்பாதியில் (வேசியில் சிற்றின்பக் காட்சி), பின்பாதியில் (முருகனின் திருவிளையாடல் கதை தலப்புரணாம்)

2301. அருணகிரிநாதரின் பிறநூல்கள் - கந்தர் அலங்காரம், கந்தர் அறுபூதி, கந்தர் அந்தாதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், திரு வகுப்பு

2302. நளவெண்பா பாடிய புகழேந்தி புலவரின் காலம் - கி.பி. 16ம் நூற்றாண்டு

2303. புகழேந்தி புலவரின் மீது பகைமை கொண்டவர் - மன்னன் (சோழன் குலோத்துங்க சோழன்), புலவர் (ஒட்டக்கூத்தர்)

2304. புகழேந்தி புலவரை ஆதரித்த மன்னன் - சந்திரன் சுவர்க்கி

2305. பெண்களின் கை தீண்டினால் வணங்காதவ் என கூறுபவர் - புகழேந்தி புலவர்

2306. கரையாலும், வருணனைகளாலும் எளிய நடையில் நயமாக சொல்லும் திறம் உடையவர் - புகழேந்திப்புலவர்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

(இ) ஒப்புக்கொண்டு (ஈ) உதவி

விடை:

(இ) ஒப்புக்கொண்டு

96.தமிழுக்கு அமுது என்று பேர் என்று பாடியவர் –

(அ) பாரதியார் (ஆ) கண்ண தாசன்

(இ) கவிமணி (ஈ) பாரதிதாசன்

விடை:

(ஈ) பாரதிதாசன்

97.செம்மை + மொழி' இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது,

(அ) செம்மொழி (இ) செம்மொளி

(ஆ) செம்மொலி (ஈ) செமொழி

விடை:

(அ) செம்மொழி

98.கீழடி' அகழாய்வு நடந்த மாவட்டம்

(அ) புதுக்கோட்டை (இ) சிவகங்கை

(ஆ) தருமபுரி (ஈ) திருச்சி

விடை:

(இ) சிவகங்கை

99.ஆதித்தமிழர்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(அ) ஆதி + தமிழர் (ஆ) ஆதி + தமிளர்

(இ) அதி + தமிழர் (ஈ) ஆதீ + தமிழர்

விடை:

(அ) ஆதி + தமிழர்

100.பொலிவு – இச்சொல்லுக்குரிய பொருள்

192.கதை + என்ன - இதனைச் சேர்த்து எழுதுக் கிடைக்கும் சொல்

அ) கதை என்ன
இ) கதையென்ன
ஆ) கதையன்ன
ஈ) கதயென்ன

விடை:

இ) கதையென்ன

193.வெயில் இச்சொல்லின் எதிர்ச் சொல்

அ) நிழல்
இ) வெப்பம்
ஆ) பகல்
ஈ) இருள்

விடை:

அ) நிழல்:

194. ‘சுமந்து’ இச்சொல்லின் பொருள்

(அ) தாங்கி
(இ) சேர்ந்து
(ஆ) பிரிந்து
(ஈ) விரைந்து

விடை :

(அ) தாங்கி

195. ‘வேண்டுமென்று’ - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

(அ) வேண்டு + மென்று
(இ) வேண் + டுமென்று
(ஆ) வேண்டும் + என்று
(ஈ) வேண்டி + என்று

விடை :

(ஆ) வேண்டும் + என்று

196. ‘நினைத்தது’ - இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல்

(அ) மறந்தது
(இ) எண்ணியது
(ஆ) பேசியது
(ஈ) வளர்ந்த து

விடை :

www.Padasalai.Net TNTET-PAPER I-COMPETITIVE EXAM TAMIL STUDY MATERIALS-9600736379

அ) மரம் + பொந்து

241.அக்கரை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) அக் + கரை

இ) அ + கரை

ஆ) அந்த + கரை

ஈ) அ + அரை

Answer:

இ) அ + கரை

242.தூறை + காற்று இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) தூறைகாற்று

இ) தூறக்காற்று

ஆ) தூற்காற்று

ஈ) தூறைக்காற்று

Answer:

ஈ) தூறைக்காற்று

243.கண் + இமைக்கும் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) கண்ணிமைக்கும்

இ) கண்மைக்கும்

ஆ) கண் இமைக்கும்

ஈ) கண்ண மைக்கும்

Answer:

அ) கண்ணிமைக்கும்

244.நானூறு இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) நான்கு + நூறு

இ) நான்கு + னூறு

ஆ) நா + நூறு

ஈ) நான் + நூறு

Answer:

அ) நான்கு + நூறு

245.பழமை + மொழி இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..................

அ) பழமைமொழி

இ) பழமையானமொழி

ஆ) பழையமொழி

ஈ) பழமொழி

Answer:

www.Padasalai.Net TNTET -PAPER-1 COMPETITIVE EXAM TAMIL STUDY MATERIALS -9600736379

ஈ) துன்பம்

290.விழலாகும் என்பதன் பொருள்

அ) வீணாகும் இ) பெருமை

ஆ) எங்கும் ஈ) மகிழ்ந்து

Answer:

அ) வீணாகும்

291.நாமக்கல் வெ. இராமலிங்கனார் ............. என்றும் போற்றப்படுகிறார்.

அ) தேசிய கவி இ) உவமைக் கவிஞர்

ஆ) காந்தியக் கவிஞர் ஈ) புரட்சிக் கவிஞர்

Answer:

ஆ) காந்தியக் கவிஞர்

292.தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர் ..............

அ) பாரதிதாசன் இ) கண்ண தாசன்

ஆ) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஈ) நாமக்கல் வெ. இராமலிங்கனார்

Answer:

ஈ) நாமக்கல் வெ.இராமலிங்கனார்

294.விளம்பரத்தாள்கள் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................

அ) விளம்பர + தாள்கள் இ) விளம்பரம் + தாள்கள்

ஆ) விளம்பரத்து + தாள்கள் ஈ) விளம்பு + தாள்கள்

Answer:

இ) விளம்பரம் + தாள்கள்

295.ஆலோசித்தல் – இச்சொல்லுக்குரிய பொருள் ........................

அ) பேசுதல் இ) எழுதுதல்

ஆ) படித்தல் ஈ) சிந்தித்தல்

Answer:

அ) கொல்லி மலை

316.குறைவின்றி – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............

அ) குறைவு + இன்

இ) குறை + இன்றி

ஆ) குறைவு + இன்றி

ஈ) குறை + இன்று

Answer:

ஆ) குறைவு + இன்றி

317.கசடற - இச்சொல்லின் பொருள் .....................

அ) தவறான

இ) குற்றமுடன்

ஆ) குற்றம் நீங்க

ஈ) தெளிவின்றி

Answer:

ஆ) குற்றம் நீங்க

317.வளமதை - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .....................

அ) வள + மதை

இ) வளம் + அதை

ஆ) வளமை + அதை

ஈ) வளம் + மதை

Answer:

இ) வளம் + அதை

318.வெளிச்சம் - இச்சொல்லின் எதிர்ச்சொல் .....................

அ) இருட்டு

இ) வெளியில்

ஆ) வெளிப்படையான

ஈ) பகல்

Answer:

அ) இருட்டு

319.புறாவிற்காகத் தன் உடலையே தந்த மன்னன் .............

அ) மனுநீதிச்சோழன்

இ) சிபி மன்ன ன்

ஆ) பாண்டியன்

ஈ) அதியமான்

Answer:

TNTET-PAPER-I-COMPETITIVE EXAM TAMIL STUDY MATERIALS -9600736379
www.Padasalai.Net

இ) சிபி மன்னன்

320.கண்ண கியின் சிலம்பு ................ ஆல் ஆனது.

அ) முத்து இ) பவளம்

ஆ) மாணிக்கம் ஈ) மரகதம்

Answer:

ஆ) மாணிக்கம்

321.அறநெறி – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................

அ) அறி + நெறி இ) அறம் + நெறி

ஆ) அற + நெறி ஈ) அறு + நெறி

Answer:

இ) அறம் + நெறி

322.கால் + சிலம்பு – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது .............

அ) காற்சிலம்பு இ) கற்சிலம்பு

ஆ) கால்சிலம்பு ஈ) கல்சிலம்பு

Answer:

அ) காற்சிலம்பு

323.தண்டித்தல் – இச்சொல்லின் பொருள் ..........

அ) புகழ்தல் இ) வழங்குவதல்

ஆ) நடித்தல் ஈ) ஒறுத்தல்

Answer:

ஈ) ஒறுத்தல்

324.சாலையில் பள்ளம் இருந்ததால், .............. பேருந்தை மெதுவாக ஓட்டிச் சென்றார்.

அ) ஓட்டுநர் ஆ) ஓட்டுனர் இ) ஓட்டுணர்

Answer:

அ) ஓட்டுநர்

325.கடலூருக்குச் செல்ல எந்த ............. ப்போக வேண்டும்?

அ) வலியாக ஆ) வளியாக இ) வழியாக

Answer:

இ) வழியாக

326.கூண்டிலிருந்த ............. யைச் சுதந்திரமாகப் பறக்கவிட்டான் எழிலன்.

அ) கிலி ஆ) கிளி இ) கிழி

Answer:

ஆ) கிளி

327.நீரில் துள்ளி விளையாடுகிறது ............... மீன்.

அ) வாளை ஆ) வாலை இ) வாழை

Answer:

அ) வாளை

328.தாய்ப் பசு இல்லாமையால் நாளடைவில் கன்று ............ப்போனது.

அ) இழைத்து ஆ) இளைத்து இ) இலைத்து

Answer:

ஆ) இளைத்து

329.கடல் ...............யில் கால் நனைத்து மகிழ்வது அனைவருக்குமே பிடிக்கும்.

அ) அளை ஆ) அழை இ) அலை

Answer:

இ) அலை

330. ‘சொல்லாடல்’ – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது…………

அ) சொல் + லாடல் இ) சொல் + ஆடல்

ஆ) சொல + ஆடல் ஈ) சொல்லா + ஆடல்

Answer:

இ) சொல் + ஆடல்

331. ‘பொழுதாற்றும்’ – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............

www.Padasalai.Net TNTET-PAPER-I-COMPETITIVE EXAM TAMIL STUDY MATERIALS-9600736379

அ) பொழு + தாற்றும் இ) பொழு + ஆற்றும்

ஆ) பொழுது + ஆற்றும் ஈ) பொழுது + தூற்றும்

Answer:

ஆ) பொழுது + ஆற்றும்

332.வேற்றுமை – இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் .........

அ) பிரிவு இ) பாகுபாடு

ஆ) வேறுபாடு ஈ) ஒற்றுமை

Answer:

ஈ) ஒற்றுமை

333. ‘குயில்பாட்டு’ நூலை எழுதியவர் யார் ....................

அ) பாரதியார் இ) வாணிதாசன்

ஆ) பாரதிதாசன் ஈ) புதுவை சிவம்

Answer:அ) பாரதியார்

334. ‘தமிழுக்கு அமுதென்று பேர்’ எனப் பாடியவர் ...........

அ) பாரதிதாசன் இ) கண்ண தாசன்

ஆ) வாணிதாசன் ஈ) பிரபஞ்சன்

Answer:அ) பாரதிதாசன்

335. “பாரதிநாள் இன்றடா, பாட்டிசைத்து ஆட்டா ” எனப் பாடியவர் ...........

அ) பாரதிதாசன் இ) கண்ண தாசன்

ஆ) வாணிதாசன் ஈ) திருமுருகன்

Answer:ஆ) வாணிதாசன்

336.பாட்டிசைத்து – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............

அ) பாட்டு + இசைத்து இ) பா + இசைத்து

ஆ) பாடல் + இசைத்து ஈ) பாட + இசைத்து

Answer: அ) பாட்டு + இசைத்து

337.மூன்று + தமிழ் – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ................

அ) மூன்றுதமிழ் இ) முதுதமிழ்

ஆ) முத்துத்தமிழ் ஈ) முத்தமிழ்

Answer: ஈ) முத்தமிழ்

338.நீங்கள் மேலே படித்தது என்ன?

அ) பாடல் ஆ) கதை இ) விளம்பரம்

Answer: இ) விளம்பரம்

339.பயிற்சி அளிக்கப்படும் விளையாட்டு எது?

அ) மட்டைப்பந்து ஆ) கபடி இ) சதுரங்கம்

Answer: ஆ) கபடி

340.மாணவர்களுக்கு எத்தனை மணி நேரம் பயிற்சி வழங்கப்படுகிறது?

அ) 1 மணி ஆ) 2 மணி இ) 3 மணி

Answer: இ) 3 மணி

341.மைதானம் – இந்தச் சொல்லுக்குரிய பொருள் எது?

அ) பூங்கா ஆ) அரங்கம் இ) திடல்

Answer: இ) திடல்

342.விளம்பரத்திலிருந்து நீங்கள் புரிந்து கொண்டது என்ன?
அ) கபடி விளையாட்டுப் பயிற்சி இலவசமாகக் கற்றுத் தரப்படுகிறது.
ஆ) கபடி விளையாட்டில் மாணவர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர்.
இ) கபடி விளையாட்டு நடைபெறுமிடம் பெரியார் விளையாட்டு மைதானம்.
Answer:
அ) கபடி விளையாட்டுப் பயிற்சி இலவசமாகக் கற்றுத் தரப்படுகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# TNSGT SUBJECT TEST


*முக்கிய குறிப்புக்கள் *

D.ed/D.T.ed முடித்தும் +TET Paper-1-ல் பாஸ் செய்துள்ள ஆசிரியர்கள் மட்டுமே (SGT)இடைநிலை ஆசிரியர் பணி நியமனத்திற்கான தேர்வு எழுத முடியும்..

**************************************************

Cellphone : 9600736379 Head Office :9994098972

SGT TAMIL-SGT ENGLISH

SGT SCIENCE-SGT MATHS

SGT SOCILAL SCIENCE

Study material

With Questions Bank

25% offers Price Available

St.courier only 9600736379